# பல்லுயிர்பெருக்கச் சட்டம், 2002

மற்றும்

# பல்லுயிர்பெருக்க விதிகள், 2004

**தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம்**
**இந்தியா**

பதிப்புரிமை : தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம், 2004

இந்நூல் இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட பல்லுயிர்பெருக்கச் சட்டம், 2002 மற்றும் பல்லுயிர் பெருக்க விதிகள், 2004 உள்ளடக்கியதாகும். கல்வி மற்றும் லாபநோக்கமற்ற காரணங்களுக்கு தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்திடமிருந்து சிறப்பு அனுமதி பெற்றபின் மறுபிரசுரம் செய்யலாம். இந்நூலை ஆதாரமாக கொண்ட எந்த பிரசுர நகலையும் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

புத்தக பட்டியல் மற்றும் சான்றாதாரத்திற்கு பல்லுயிர்பெருக்க சட்டம், 2002 மற்றும் பல்லுயிர் பெருக்க விதிகள் 2004, தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் (2004), 57 றிறி என கட்டாயமாக குறிப்பிட வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி
ஆணையத்தலைவர்,
தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம்,
475, 9, தெற்கு குறுக்கு சாலை
கபாலீஸ்வரர் நகர்,
நீலாங்கரை,
சென்னை - 600 041.

அச்சிட்டோர்

# அணிந்துரை

பல்லுயிர் வளங்கள் குறைந்து வருவதன் விளைவாக, 1992ம் ஆண்டு பல்லுயிர்ப்பெருக்க மாநாடு நடைபெற்றது. தேசிய சட்டத்திற்கு உட்பட்டும் பரஸ்பர ஒப்பந்தத்தின்படியும் மக்கள் தங்கள் நாட்டின் உயிர்வளங்கள் மற்றும் பாரம்பரிய அறிவாண்மையை முறையாக பகிர்ந்து பயன்படுத்தவும் பிறநாடுகள் இந்நாட்டு மரபியல் வளங்களை பெற வசதி செய்து தரவும், இம்மாநாட்டின் கூட்டமைப்பு அறிவுறுத்துகிறது.

உயிர்தொழில்நுட்ப வளர்ச்சியால் பல்லுயிர் வளங்களுக்கு அதிக அளவில் பாதிப்பு ஏற்படுவதை கருத்தில்கொண்டு இந்திய அரசியலமைப்பு பல்லுயிர்ப் பெருக்க சட்டம், 2002 (ழிஷீ. 18 ஷீயீ 2003) கொண்டு வந்தது அதன் விதிமுறைகளை 2004ஆம் ஆண்டு அறிவித்தது.

இச்சட்டம் மற்றும் அதன் விதிமுறைகள் மத்திய மற்றும் மாநில அரசும், பல்வேறு நிலையிலுள்ள உயர்மட்ட குழுவினரும் மற்றும் தனிநபரும் பின்பற்றக்கூடிய அளவிற்கு உதவியாகவும் தன்னிறைவு பெற்றதாகவும் இருக்கும். தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள பல்லுயிர் வள பாதுகாப்பு சட்டம் மற்றும் விதிமுறைகள் கையேடு பல்லுயிர் வளத்தை பயன்படுத்துவோருக்கும் அதனை நடைமுறை படுத்துபவர்களுக்கும் வசதியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

உயிர் தொழில்நுட்ப வளர்ச்சியையும் பொருளாதாரத்தையும் இச்சட்டம் பாதிக்குமோ என்ற அச்சம் சிறிதும் தேவையில்லை என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பல்லுயிர் பெருக்க ஒப்பந்தத்தை ஒரு சிறந்த வழியில் கொண்டு செல்ல இச்சட்டத்திற்கு செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் பல்லுயிர் வளங்களை பாதுகாக்கவும் அதனை பயன்படுத்துவோர் சீரான முறையில் பயன்படுத்தவும் வழிவகுக்கும். பல்வேறு வகையான மரபியல் பெருக்கத்தைக் கொண்டு இந்தியா ஒரு மிகப் பெரிய பல்லுயிர்பெருக்க நாடாக விளங்க, கொள்கைகள், செயல்திட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்புத்தக வெளியீடு மேற்கூறிய நோக்கத்தை அடைய வழிவகுக்கும். பல்லுயிர்பெருக்கத்தை பாதுகாக்க முயற்சித்து வரும் அனைத்து தரப்பட்ட மக்களையும் வாழ்த்துவதோடு, நம் புவியை பல்லுயிர்ப்பெருக்கமிக் சிறந்த வாழிடமாக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

22 செப்டம்பர், 2004,
புதுடெல்லி

(ஆ. இராசா)

# முன்னுரை

புவியில் வாழும் அனைத்து உயிர் வகைகளின் மொத்த தொகுப்பே பல்லுயிர்ப் பெருக்கம் எனப்படும். உலகின் மிகப்பெரிய பல்லுயிர் வளம் மிக்க 12 நாடுகளில் நம் இந்திய நாடும் ஒன்றாகும். உலகின் மொத்த நிலபரப்பில் 2.5% உள்ள நம்நாட்டில், உலகில் காணப்படும் உயிர் வகைகளில் 7.8% இங்கு காணப்படுகின்றது. மேலும் நம்நாடு பாரம்பரியம் மற்றும் கலாச்சார அறிவாண்மை மிக்கதாகும்.

1992ல், உலகின் பல்லுயிர்ப்பெருக்க மாநாட்டில் இந்தியா பல்லுயிர்ப்பெருக்க ஒப்பந்தம் நிபந்தனை 3 மற்றும் 15ன்படி, தேசிய சட்டதிட்டத்திற்கு உட்பட்டும் பரஸ்பர ஒப்பந்தத்தின்படியும் மக்கள் தங்கள் நாட்டின் உயிர்வளங்களை முறையாக பகிர்ந்து பயன்படுத்துவதற்கும் பிற நாடுகளும் இந்நாட்டு மரபியல் வளங்களை பெற வசதி செய்து தரவும் இக்கூட்டமைப்பு அறிவுறுத்துகிறது. பல்லுயிர்ப்பெருக்க ஒப்பந்தம் நிபந்தனை 8 (ஜீ) ன்படி, பாரம்பரிய அறிவாண்மை, செயல்முறைகள். புதிய யுக்திகள், மற்றும் சரிசமர் பகிர்வின் மூலம் நாட்டின் உயிர் வளங்கள் பாதுகாப்பதிலும் நிலையான பயன்பாடடைதலிலும் அந்நாட்டு மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

பல்லுயிர்ப்பெருக்கம் என்பது பல்வித நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் உள்ளடக்கிய பல்துறை சார்ந்த நெறிமுறையாகும். மத்திய அரசு, மாநில அரசுகள், தன்னாட்சி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்ற அனைத்துமே பல்லுயிர்ப்பெருக்கத்தின் பயனாளிகள் ஆவர். இந்தியா முக்கிய கொள்கையாக உட்புகுத்தி கொண்டிருந்த, முக்கிய சவாலாக விளங்கிய 'சரிசமர் பகிர்வு' பெறுதலின் நோக்கங்கள் பல்லுயிர்பெருக்க ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டது.

பயனாளிகள் பங்கேற்புடன் பல்வித தீவிர ஆலோசனைகள் நடத்தியபிறகு, மத்திய அரசு கீழ்க்கண்ட முக்கியம்சங்களை உள்ளடக்கிய பல்லுயிர்பெருக்க சட்டத்தை 2002ம் வருடம் அமுலுக்கு கொண்டுவந்தது. 1. நாட்டின் உயிர் வளங்கள் மற்றும் அதன் சார்ந்த அறிவாண்மையை பெறுவதற்கான சரிசமர் பகிர்வு முறையை ஒழுங்குமுறைப்படுத்துதல், 2. பல்லுயிர்ப்பெருக்கப் பாதுகாப்பும் நிலையான பயன்பாடும். 3. பல்லுயிர்ப்பெருக்கம் சார்ந்த அந்நாட்டு மக்களின் பாரம்பரிய அறிவாண்மையை போற்றி பாதுகாத்தல். 4. பல்லுயிர் வளம் பாதுகாப்பு மற்றும் அதன் பயன்பாடு சார்ந்த பாரம்பரிய அறிவாண்மையைப் பெற்றுள்ள அந்நாட்டு மக்களுடன் இணைந்து பயனை பகிர்ந்து கொள்ளுதல். 5. 'பாரம்பரிய பல்லுயிர்ப்பெருக்க' பகுதியாக அறிவிப்பதன் மூலம், சிலமுக்கிய இடங்களின் பல்லுயிர் வளத்தை முறையாக பாதுகாத்தலும் அப்பகுதியினை மேம்படுத்தலும். 6. அச்சுறுத்தப்படும் உயிர்வகைகளை பாதுகாத்தலும் ம று வ ா ழ் வ ளி த் த லு ம் .
7. பல்வித நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகள் உள்ளடக்கிய தனிப்பட்ட குழுக்கள் அமைத்து பல்லுயிர்ப்பெருக்க சட்டத்தை அமுலாக்குதல்.

# சட்டம் மற்றும் நீதிதுறை அமைச்சகம்

(சட்டத்துறை)

**புது தில்லி, 5, பிப்ரவரி, 2003/மகா 16, 1924 (சக)**

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம், 2003, பிப்ரவரி 5ஆம் தேதி குடியரசு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு பொது தகவலுக்காக வெளியிடப்படுகிறது.

## பல்லுயிர் பெருக்க சட்டம், 2002

நெ. 18, 2003

**(5, பிப்ரவரி, 2003)**

பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு, பயன்படுத்தும் அளவு மற்றும் செழுமை மற்றும் உயிரின ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் பயன்களை சமபங்கிடுதல் மற்றும் பல்லுயிர்பெருக்க தகவல்கள் பற்றி இச்சட்டம் வகை செய்கிறது. பல்லுயிர் பெருக்கம் மிகுதியாக உள்ளதோடு அதைப்பற்றிய பாரம்பரிய தகவல்களை கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது.

உலக பல்லுயிர் பெருக்க உடன்பாடு 1992ம் ஆண்டு ஜுன் 5ம் தேதி ரியோடி ஜெனிரோவில் நடந்த ஐக்கிய நாட்டு பல்லுயிர் பெருக்க மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது.

மேலே கூறப்பட்ட இந்த பல்லுயிர் பெருக்க மரபு 1993ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் தேதி கட்டாயப் படுத்தப்பட்டது.

உயிரியல் ஆதார மரபின்மேல் அரசுரிமையுடைய அரசால் மறு உறுதிப்படுத்தப்பட்டது.

பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாத்தல், அளவோடு பயன்படுத்துதல், செழுமை மற்றும் மரபின ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் பயன்களை சமபங்கீடு செய்தல் போன்றவைகளே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மரபணு ஆதாரங்கள் மூலம் கிடைக்கும் பயன்களை சமபங்கீடு செய்தல், அளவாக பயன்படுத்துதல் போதுமான பாதுகாப்பு அளித்தல், மற்றும் பரிசீலிப்பு இச்சட்டத்தை மேலும் வலுப்படுத்துதல்.

பின்வரும் இச்சட்டம், சுதந்திர இந்தியாவின் 53வது வருட பாராளுமன்ற கூட்டத்தில் இயற்றப்பட்டது.

## அத்தியாயம் - 1
## முதல்நிலை

குறுந்தலைப்பு : விரிவாக்கம் மற்றும் தொடக்க பொருள் வரையறைகள்

(1) இந்த சட்டமானது பல்லுயிர் பெருக்கச் சட்டம், 2002 என வழங்கப்படும்.

(2) இச்சட்டம் இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்.

(3) மத்திய அரசு எந்த தேதியில் இச்சட்டத்தை கொண்டுவந்ததோ அந்த தேதியிலிருந்து இச்சட்டத்தை அரசு ஆணையாக அறிவிக்கப்படும்.

இருப்பினும், இச்சட்டத்தில் வரும் வெவ்வேறு பிரிவுகளும் வெவ்வேறு தேதிகளில் செயல்படுத்தப்படலாம். அவ்வாறு செயல்படுத்தப்படும் பிரிவுகள் எந்த தேதியிலிருந்து செயல்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளதோ அந்த தேதியே அப்பிரிவுக்கான தேதியாக எடுத்துகொள்ள வேண்டும்.

2. வரையறுத்தல் / விளக்கம்

இச்சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி தேவைப்பட்டால்

(அ) "பயன்களில் / நன்மைகளில் உரிமை கோருபவர்கள்" உயிரியல் ஆதாரங்களின் மூலம் கிடைக்க கூடிய உபபொருள்கள் மற்றும் அதை பயன்படுத்தும் முறை ஆகியவற்றை பற்றிய தகவல்களை நன்கு அறிந்தவர்கள் மற்றும் உயிரின ஆதாரங்களை பாதுகாப்பவர்கள் என்று பொருள்.

(ஆ) "பல்லுயிர் பெருக்கம்" என்பது அனைத்து ஆதாரங்களிலிருந்தும் மாறுபட கூடிய நிலையுள்ள உயிரினங்கள் மற்றும் அவை சூழலமைப்பு மற்றும் அச்சூழலமைப்பில் உள்ள சிற்றினங்களுக்குள் அல்லது சிற்றினங்களிடையே உள்ள மாறுபாடே ஆகும்.

(இ) "உயிரின வள ஆதாரம்" என்பது தாவரம், விலங்கு மற்றும் நுண்ணுயிரிகள் அல்லது அதன் பிரிவை சேர்ந்தது, அதனுடைய மரபு வழி பண்பு பொருள்கள் அல்லது துணைப்பொருள்கள் (மதிப்பு மிக்க பொருள்கள் தவிர) உண்மையான பயன் அல்லது தேவையின்போது பயன்படுவது அல்லது மதிப்புடைய பொருள்கள் ஆகும். இதில், மனித மரபுவழி பண்பு பொருள்கள் உள்ளடங்காது.

(ஈ) "உயிரின-ஆய்வு அல்லது உயிரின பயன்பாடு" என்பது ஆய்வு அல்லது எந்த ஒரு செயலுக்கும் அதாவது சிறப்பு இயல்புக்காக, விவரப்பட்டியலுக்காக மற்றும் உயிரின ஆராய்ச்சிக்காக சிற்றின, துணை சிற்றினம் சேகரிப்பும், மரபணு மற்றும் உயிரின ஆதாரங்களின் உறைசத்து ஆகியவை ஆகும்.

(உ) "தலைவர்" என்பது தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் தலைவர் அல்லது மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்தின் தலைவர்.

(ஊ) "வாணிப பயன்பாடு" என்பது முழுவதுமாக வாணிப பயன்பாட்டிற்கு பயன்படும் உயிரின ஆதாரங்களான மருந்து பொருள்கள், தொழிலக செறிவுப்பொருள்கள், பிசின், வண்ணம், வாசனை மற்றும் ஒப்பனை பொருள்கள் மற்றும் பயிற் மேலாண்மைக்காக மரபணு உரை சத்து போன்றவையே. ஆனால், மரபு பண்புகள் செறிந்த இனம் அல்லது விவசாயம், தோட்டபண்ணை, கோழிபண்ணை, பால் பண்ணை, கால்நடை பராமரிப்பு மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற இவை வாணிப பயன்பாட்டில் உள்ளடங்காதவை ஆகும்.

(எ) "நியாயமான அடிப்படையில் பயன்களை சமமாக பகிர்ந்துகொள்ளுதல்" என்பது தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் பிரிவு 21ன்படி பயன்களை பகிர்ந்து கொள்ளுதலை தீர்மானிக்கும் அல்லது நிர்ணயிக்கும் என்று பொருள்.

(ஏ) "உள்ளாட்சி மன்றம்" என்றால் பஞ்சாயத்து மற்றும் நகராட்சி, மத்திய மற்றும் மாநில சட்ட செயலினுடைய பிரிவு 243ஙின், உட்பிரிவு (1) மற்றும் பிரிவு 243னின் உட்பிரிவு (1) கீழ் பஞ்சாயத்தோ, நகராட்சியோ, இல்லையென்றால் மத்திய அல்லது மாநில சட்டவிதிகளின்படி தன்னாட்சி உரிமை கொண்ட நிறுவனங்களை உள்ளாட்சி மன்றம் அல்லது யாதொரு பெயரிலோ அழைக்கலாம்.

“உறுப்பினர்” என்பது தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையகம் அல்லது மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்தின் உறுப்பினர் என்று பொருள். இதில் தலைவரும் (அடங்குவர்) (உட்பட) (சேர்த்துக்கொள்ளவேண்டும் (இடம்பெறுவார்)

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் என்பது, தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் பிரிவு 8ன் கீழ் நிறுவப்பட்டதாகும்.

“குறிப்பிடப்பெற்ற” என்பது இச்சட்டத்தின் கீழ் விதி 1இல் குறிப்பிடப்பெற்ற என்பது பொருள்.

“ஒழுங்குமுறைவிதிகள்” என்பது இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகள்.

“ஆராய்ச்சி” என்பது உயிரின ஆதாரங்களை முறையாக ஆய்வு செய்தல் அல்லது உயிரின வகைகளின் பயன்களில் தொழிற்நுட்பத்தை செயல்படுத்தல் அல்லது உயிரின மூலத்திலிருந்து பெறப்படும் பொருள்களின் பயன் என்று பொருள்.

“மாநில பல்லுயிர் பெருக்க வாரியம்” என்பது இச்சட்டத்தின் பிரிவு 22ன் கீழ் மாநில பல்லுயிர் பெருக்க வாரியம் நிறுவப்பட்டது.

“நிலையான பயன்” என்பது பல்லுயிர் பெருக்கத்தின் ஆக்க கூறால் கிடைக்கும் பயன் மற்றும் அவ்வாக்க கூறுகளால் பல்லுயிர் பெருக்கத்தில் சரிவு ஏற்படாமல் தற்பொழுது உள்ள மக்கள் மற்றும் சந்ததியனரின் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவுக்கு அழியாமல் பாதுகாத்தல் என்று பொருள்.

“விலைமதிப்பு பெற்ற பொருள்கள்” என்பது இனங்காணமுடியாத அல்லது இயற்கையாக பிரித்தெடுக்க முடியாத தாவர மற்றும் விலங்கினங்களிலிருந்து பெறப்படும் விளைப்பொருள் அல்லது அவற்றிலிருந்து பிரித்தெடுக்கும் பகுதி என்று பொருள்.

## அத்தியாயம் - 2

## பல்லுயிர் பெருக்கத்திற்கான நுழைவு ஒழுங்குமுறை விதிகள்

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் அனுமதி இல்லாமல் பல்லுயிர் பெருக்கம் பற்றிய செயல்களில் யாரும் ஈடுபடகூடாது.

3. (1) இச்சட்டத்தின் உள்பிரிவில் எந்த நபரையும் குறிப்பிடவில்லை. (2) இந்தியாவில் உள்ள உயிரின ஆதாரம் அல்லது ஆராய்ச்சி சம்பந்தபட்ட தகவல் அல்லது வணிக பயன்பாடு அல்லது உயிரின ஆய்வு மற்றும் பயன் போன்ற எவற்றையும் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் அனுமதி இல்லாமல் பெறக் கூடாது.

(2) இச்சட்டத்தின் உள்-பிரிவு (1)ன் கீழ் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் அனுமதி பெற வேண்டுவோர்

(அ) இந்திய குடியுரிமை அல்லாத நபர்,

ஆ. 1961ஆம் ஆண்டின் வருமான வரி சட்டத்தின் பிரிவு 2 உட்பிரிவு (30)இல் வரையறுக்கப்பட்டுள்ள இந்தியாவில் வசிக்காத இந்திய நபர்.

இ. கூட்டாண்மை அமைப்பு, கழகம் அல்லது நிறுவனம்

(1) ஒருங்கிணைக்கப்படாத அல்லது இந்தியாவில் பதிவு பெறாத; அல்லது

(2) இந்திய அரசியல் சட்டம் ஒன்றின் கீழ் இந்தியர்கள் பங்கு தாரராக இல்லாத அல்லது மேலாண்மை பொறுப்பில் இல்லாத நிறுவனத்திற்கு தற்காலிகமாக இந்தியர் அல்லாத ஒருவர் பொறுப்பேற்றிருக்கும் நிறுவனம்

**தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் அனுமதி இல்லாமல் ஆராய்ச்சியின் முடிவுகளை வேறு நபர்களுக்கு கொடுக்க கூடாது.**

4. இந்திய குடிமகன் அல்லாத எந்த ஒரு நபருக்கோ அல்லது 1961ஆம் ஆண்டின் வருமானவரி சட்டத்தின் பிரிவு 2 உட்பிரிவு (30) இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி இந்தியாவில் வசிக்காத இந்திய குடிமக்களுக்கோ அல்லது இந்தியாவில் பதிவு செய்யபடாத எந்த ஒரு நிறுவனத்திற்கோ அல்லது பங்குதாரர்களாகவோ அல்லது மேலாண்மை பொருப்பில் இந்தியர்கள் இல்லாத நிறுவனத்திற்கோ தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் முன் அனுமதி இல்லாமல் யார் ஒருவரும் இந்தியாவில் உள்ள அல்லது இந்தியாவிலிருந்து பெறபட்ட பல்லுயிர் பெருக்க வளங்களை பற்றிய ஆராய்ச்சியின் முடிவுகளை பரிமாற்றம் செய்ய கூடாது.

விளக்கம் : இப்பிரிவின் நோக்கம் என்ன என்றால், மத்திய அரசால் வெளியிடபட்ட வழிமுறைகள்படி, கருத்தரங்குகளில் வெளியிடப்படும் ஆராய்ச்சி கட்டுரைகள் மற்றும் தகவல் பரிமாற்றம் போன்றவைகள் இம் பரிமாற்றத்தில் உள்படாது.

**கூட்டாக செய்யும் சில ஆராய்ச்சி திட்டங்களுக்கு பிரிவு 3 மற்றும் பிரிவு 4 பொருந்தாது.**

5. (1) அ. பிரிவு 3 மற்றும் பிரிவு 4இன் வழிமுறைகள்படி அண்டை நாட்டில் உள்ள இந்திய நிறுவனத்திற்கோ, அல்லது அரசால் உதவி பெறும் இந்திய நிறுவனங்களோ, மாற்றத்திற்குட்பட்ட கூட்டாக செய்யும் ஆராய்ச்சி திட்டம் மற்றும் உயிர் வள ஆதாரங்களை பரிமாற்றம் செய்யவோ பிரிவு 3 மற்றும் பிரிவு 4இல் கூறப்பட்டுள்ள வழிமுறைகள் பொருந்தாது. கூட்டு ஆராய்ச்சி திட்டத்திற்கு உப பிரிவு 3இல் குறிபிடப்பட்ட வரையறைகள் திருப்த்தி அளிக்கும் பட்சத்தில்

(2) அனைத்து கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள், இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே உப பிரிவு (1) இல் கூறியுள்ளபடி ஒப்பந்தமாகி இருந்தால், அந்த ஒப்பந்தத்தின் வழிவகைகளின் அளவு, இச்சட்ட வழிவகைகளுக்கு முரணானது அல்லது உப பிரிவு (3)ன் உட்பிரிவு (அ)ன் கீழ் கொடுக்கப்பட்ட வழிமுறைகளின்படி செல்லுபடி ஆகாது.

(3) உப பிரிவு (1)ன் நோக்கத்திற்காக, கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள்

அ. இது சம்பந்தமாக மத்திய அரசால் வெளியிடப்பட்ட கொள்கையை பின்பற்றத்தக்க வழிமுறைகளுக்கு இணங்குதல்.

ஆ. மத்திய அரசின் அனுமதி பெறுதல்.

**தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் ஒப்புதல் பெறாமல் அறிவுணர் சொத்துவழி உரிமைக்கு விண்ணப்பிக்க இயலாது.**

6. (1) எந்த ஒரு நபரும் அறிவுணர் சொத்துவழி உரிமை அல்லது வேறு எந்த பெயரிலோ ஆராய்ச்சிக்காக இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ கண்டுபிடிப்புகள், உயிரின ஆதாரத்தினுடைய எந்த தகவலையும் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்திடமிருந்து முன் அனுமதி பெறாமல் விண்ணப்பிக்கக் கூடாது.

இருப்பினும் எந்த நபரானாலும் தனியுரிமை பெற விண்ணப்பம் செய்தால், அவ்விண்ணப்பம் தனியுரிமை வழங்கும் அதிகாரியின் ஒப்புதலுக்கு பிறகே, (தே.ப.பெ.ஆ.) தனியுரிமை அனுமதி அறிவிக்கப்படும்.

இருப்பினும் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் விண்ணப்பம் பெற்ற தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் முடிவு செய்யும்.

(2) சட்டப் பிரிவின் கீழ் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் சம பங்கு கட்டணம், அல்லது உரியம் விதித்தல் அல்லது இரண்டும் அல்லது வாணிப உரிமையால் கிடைக்கும் சம பொருளாதார பயன்களுக்கும் விதிகள் வரையறக்கப்படும்.

(3) இப்பிரிவின் வழிவகைகள், பாராளுமன்றத்தில் தாவர வகைகளை பாதுகாத்தல் பற்றிய எந்த சட்டத்தின் கீழும் விண்ணப்பம் செய்யும் யாதொரு நபருக்கும் பொருந்தாது.

4. இச்சட்டத்தின் உட்பிரிவு (3)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி உரிமை வழங்கியிருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரி அளிக்கப்பட்டுள்ள உரிமை, நகலை தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

குறிப்பிட்ட சில நோக்கத்திற்காக உயிரியல் ஆதாரங்களை பெற மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கு முன் தகவல் தரவேண்டும்.

7. எந்த ஒரு இந்திய நபர் அல்லது கூட்டாண்மை அமைப்பு, கழகம் அல்லது இந்தியவில் பதிவு பெற்ற நிறுவனம் ஆகியவை வாணிப பயனிற்காக அல்லது உயிர்வள அளவு மற்றும் பயன்களை மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கு முன்தகவல் கொடுத்த பிறகுதான் பெறமுடியும்.

இருப்பினும் அப்பகுதியில் உள்ள உள்ளூர் மக்கள் மற்றும் சமுதாயத்தினருக்கும் அதாவது பல்லுயிர் பெருக்கத்தை வளர்ப்போர் மற்றும் வைத்தியர்கள் மற்றும் பாரம்பரியமான வைத்தியம் செய்பவர்களுக்கு அப்பிரிவின் வகைகள் எக்காரணத்திலும் பொருந்தாது.

## அத்தியாயம் - 3
## தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம்

8. (1) மத்திய அரசால், அரசாணை குறிப்பிட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின் நோக்கத்திற்காக ஒரு அமைப்பை உருவாக்கி, அதனை தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் என்றழைப்பர்.

(2) தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம் ஒரு கூட்டாண்மை அமைப்பாகும். இடையறாத மரபுரிமை மற்றும் பொது முத்திரையுடனும் அதிகாரத்துடன் அசையும் மற்றும் அசையா சொத்துடமையை விற்பதற்கோ அல்லது கைபற்றவோ மற்றும் ஒப்பந்தம் செய்யவோ, வழக்கு தொடங்கவோ இந்த ஆணையத்திற்கு உரிமை உண்டு.

(3) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் இருக்கும். மேலும், மத்திய அரசின் ஒப்புதலுடன் இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இவ்வலுவலகம் விஸ்தரிக்கப்படும்.

4. தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் கீழ்கண்டவாறு உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும்.

அ. பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு பற்றிய அறிவாண்மை, மற்றும் பயன்களை சமபங்கீடுதல் பற்றிய அனுபவம் மிக்க ஒருவரை மத்திய அரசு ஆணைய தலைவராக நியமிக்கும்.

ஆ. மூன்று அலுவல் வழி உறுப்பினர்களையும் மத்திய அரசு நியமனம் செய்யும். இதில் ஒருவர் பழங்குடி அமைச்சக செயலகத்திலிருந்தும் இரண்டு பேர் சுற்றுசூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திலிருந்தும் நியமிக்கப்படுவர். அவர்கள் வன கூடுதல் பொது இயக்குனர் அல்லது வனபொது இயக்குனர் ஆவர்.

இ. (1) விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வி (2) உயிர் தொழிற்நுட்பம், (3) கடற் மேம்பாடு, (4) விவசாயம் மற்றும் கூட்டுறவு, (5) இந்திய மருத்துவம் மற்றும் ஹோமோபதி, (6) அறிவியல் மற்றும் தெழில்நுட்பம், (7) அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி ஆகிய அமைச்சகத்திலிருந்து 7 அலுவல் வழி உறுப்பினர்களை மத்திய அரசு நியமிக்கும்.

ஈ. அலுவல் வழி அல்லாத, பல்லுயிர் பெருக்கத்தின் பாதுகாப்பு, பயன், உயிரின ஆதாரம், வளம், சமபங்கீடு போன்றவற்றில் திறமை வாய்ந்த அறிவியல் அறிஞர்கள் மற்றும் தனி திறமையாளர்கள் 5 உறுப்பினர்களை மத்திய அரசு நியமிக்கும் **ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களுடைய பணி முறைமைகள்.**

9. அலுவல் வழி உறுப்பினர்களை தவிர தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் பணிமுறைமைகள் யாவும் மத்திய அரசால் குறிப்பிடப்படும்.

**தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் தலைவரே முதன்மை செயல் அலுவலர் ஆவார்.**

10. முதன்மை செயல் அலுவலராக தலைவர் அவர்களே தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் பணிகளை அதிகாரத்துடன் செயல்படுத்துவார்.

உறுப்பினர்களை பணிநீக்கம் செய்தல்

11. தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தில் உள்ள ஒரு நபரை மத்திய அரசு

(அ) நொடிப்பு நிலையில் உள்ள நபரை பணிநீக்கம் செய்யலாம்; அல்லது

(ஆ) ஒழுக்க கேட்டால் குற்றம் சாட்டப்பட்ட நபர்;

(இ) உடல் மற்றும் மனநிலை பாதிப்பால் உறுப்பினராக இருக்க இயலாதவர் அல்லது

(ஈ) பொது நலனுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் தன் உடமைக்கு தகாத முறையில் அலுவலகத்தில் தொடர்ந்து உதவும் நபர்

(உ) பணம் பெற்றல் அல்லது உறுப்பினராக செயல்படுவதை பாதிக்கக்கூடிய பிற செயல்களில் ஈடுபடும் நபர்;

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய கூட்டம்

12. (1) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய கூட்டம் குறிப்பிட்ட தேதி மற்றும் இடத்தில் மேலும் நடைமுறை விதிப்படி வணிக நடவடிக்கை சம்பந்த கூட்டம் குறிப்பிட்ட கால வரம்புக்குள் நடைபெறும்.

(2) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய தலைவரே தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

(3) தவிர்க்க முடியாத காரணத்தினால் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய கூட்டத்திற்கு ஆணையத்தலைவர் வரமுடியாத நிலையில், அவரால் நியமிக்கபடும் ஒருவரே கூட்டத்தின் தலைவராக இருப்பார்.

(4) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய கூட்டத்தில் எழுப்பப்படும் எந்த ஒரு கேள்விக்கும் வாக்கு எடுப்பு முறையில் முடிவெடுக்கப்படும். சமமான வாக்கு பெறும் பட்சத்தில் ஆணையத்தலைவர் அல்லது கூட்டத்தலைவர் தங்கள் வாக்குகளை அளித்து இறுதி முடிவெடுக்கலாம்.

(5) ஒவ்வொரு உறுப்பினரும், ஏதோ ஒரு வகையில், நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது தன்னிச்சையாகவோ கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ள பொருள் பற்றி தனி விருப்பம் கொண்டிருந்தால் அதனை வெளிபடுத்திய பிறகு சம்பந்தப்பட்ட உறுப்பினர் அக்கூட்டத்தில் கலந்துகொள்ள கூடாது.

(6) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தால் கொண்டுவரப்படும் சட்டம் அல்லது தீர்மானங்கள் சில காரணங்களால் செல்லுபடி ஆகாது.

(அ) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் குழுமத்தில் குறைபாடு அல்லது அதிலுள்ள காலியிடம்; அல்லது

(ஆ) உறுப்பினர் நியமனத்தில் குறைபாடு; அல்லது (இ) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் நடைமுறையில் உள்ள வழக்கின் தகுதிகளை பாதிக்காத வகையில் முறைகேடு

தேசிய பல்லுயிர் பெருக்க குழுமம்

13. (1) வேளாண் பல்லுயிர் பெருக்கத்தை கையாள தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் ஒரு குழுமத்தை அமைக்கலாம்.

விளக்கம் :

இந்த உபபிரிவின் நோக்கம், வேளாண் பல்லுயிர் பெருக்கம் என்பது விவசாய தாவரங்கள் மற்றும் அதனை சார்ந்த கான் உயிர் தாவரங்களின் பல்லுயிர்பெருக்கம் ஆகும்.

(2) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் இச்சட்டத்தின் உப பிரிவு (1)ன் வகைப்படி பாரபட்சமின்றி கடமைகளை சரிவர செயலாக்கம் செய்யும் என்று கருதினால் இச்சட்டத்தின்கீழ் ஒரு குழுமத்தை உருவாக்கலாம்.

(3) குறிப்பிட்ட பிரிவின்படி அமைக்கப்பட்ட குழு உறுப்பினர்களை தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய குழு உறுப்பினர்களாக இருக்க கூடாது. அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் தீர்மானங்களை நிறைவேற்றவும் உரிமை உண்டு. ஆனால், அவர்களுக்கு தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை கிடையாது.

(4) உப பிரிவு (2)ன் படி உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டவருக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட படி (allowance) கூட்டத்தில் கலந்து கொண்டமைக்கு கொடுக்கப்படும்.

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய அதிகாரி மற்றும் அலுவலர்கள்

14. (1) இச்சட்டத்தின்படி பணிகளை சரிவர செய்து முடிக்ககூடிய அதிகாரி அல்லது அலுவலர்களை தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் நியமிக்கலாம்.

(2) அலுவலர்களின் பணிக்கால விதிமுறைகள் மற்றும் வரையறைகள் பற்றி இச்சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்கு முறை விதிப்படி இருக்க வேண்டும்.

தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்தின் உத்தரவு மற்றும் முடிவுகளின் உரிமச் சான்று

15. தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் அனைத்து உத்தரவுகளும் முடிவுகளும் அதனுடைய தலைவரின் கையொழுத்துடனோ அல்லது தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்தினரால் இதற்கென அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஒருவருடைய கையெழுத்துடனோ வெளியிட வேண்டும்.

பொறுப்புகள் ஒப்படைப்பு

16. தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம், யாதொரு உறுபினருக்கோ அல்லது அதிகாரிக்கோ அல்லது வேறு நபருக்கோ சில நிபந்தனைகள் ஏதும் இருந்தால் பொதுவான அல்லது எழுத்து மூலமான சிறப்பு உத்தரவை வழங்கி பொறுப்புகளையும் செயல்முறைகளையும் (பிரிவு 50ன் கீழ் பொறுப்புகளை பற்றி மேல்முறையீடும், பிரிவு 64ன் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தவும் முடியாத வகையில்) வழங்கிடலாம்.

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் அனைத்து செலவுகளும் இந்தியாவின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும்.

17. தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்தின் உறுப்பினர்களுக்கான சம்பளம், மற்றும் படிகள், நிர்வாக செலவுகள், அங்கு பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் ஓய்வூதியம் இந்தியாவின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும்.

## அத்தியாயம் - 4

## தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்தின் செயல்முறை மற்றும் பொறுப்பு

18. (1) தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம் பிரிவு 3,4 மற்றும் 6இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள செயல்களை முறைப்படுத்துவதற்கும் மற்றும் உயிரியல் வளத்தை பற்றியும் நியாயமான மற்றம் சமபயன் பங்கீட்டல் ஆகியவற்றை பற்றிய விதிமுறைகளை வழங்கல்.

(2) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் பிரிவு 3,4 மற்றும் 6இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள யாதொரு செயலுக்கம் அங்கீகாரம் வழங்கலாம்.

(3) தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையமானது

(அ) பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு, நிலையான உயிரியல் வளபயன்பாடு மற்றும் உயிரியல் ஆதாரம் பற்றிய அறிவாண்மையை பயன்படுத்துவதில் வரும் பயன்கள், சம பயன்பங்கீட்டல் பற்றிய யாதொரு விஷயத்தையும் மத்திய அரசுக்கு அறிவுறுத்தல்.

(ஆ) பல்லுயிர் பெருக்க முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை தேர்ந்தெடுக்கப்படுவதை பிரிவு 37ல் உள்ள உபப்பிரிவு 1ல் குறிப்பிட்டுள்ளபடி பாரம்பரிய இடமாகவும் மற்றும்

அவற்றை நிர்வகிக்க தேவையான நடவடிக்கை எடுக்கவும் மாநில அரசுக்கு அறிவுறுத்தல்.

(இ) தேவைப்படின் இதர செயல்முறைகளை இச்சட்டத்தின் கீழ் செயல்முறைபடுத்தல் போன்றவற்றை செய்யலாம்.

4. மத்திய அரசின் சார்பாக தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் இந்தியாவில் இருந்து பெறப்பட்ட உயிரியல் வளம் ஆய்வுணர் உரிமை ஆகியவற்றை பயன்படுத்தும் யாதொரு நாட்டையும் தக்கபடி எதிர்க்கும்.

## அத்தியாயம் - 5

# தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்தின் ஒப்புதல்

ஒருசில செயல்களை செய்ய தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் ஒப்புதல் அளித்தல்

1. பிரிவு 3ன் உபபிரிவு (2)ல் குறிப்பிடபட்டுள்ள யாதொரு நபரும் இந்தியாவில் கிடைக்ககூடிய உயிரியல் வளம் அல்லது ஆராய்ச்சிக்கு வழிவகுக்கும் அறிவாண்மை அல்லது வணிக அல்லது உயிரின விவரங்களை அறிதல் மற்றும் உயிரின உபயோகம் அல்லது இந்தியாவில் உள்ள அல்லது கிடைக்ககூடிய உயிரியல் வளத்தை பற்றிய ஆராய்ச்சி முடிவுகளைப்பெற தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தில் அதற்கான கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

2. பிரிவு 6ன் உபபிரிவு (1)ல் குறிப்பிடபட்டுள்ள யாதொரு நபரும் தனிஉரிமை அல்லது ஆய்வுரிமைப் பாதுகாப்பை இந்தியாவிலோ அல்லது வெளியிலோ பெற தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தில் அதற்கான கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

3. உபபிரிவு (1) அல்லது உபபிரிவு (2)ன் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களை தகுதியானவையா என கருத தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம் தகுந்த முறையில் விசாரணை மேற்கொண்டு தேவைப்படின் இதற்கென உருவாக்கப்பட்டுள்ள நிபுனர்குழுவை கலந்தாலோசித்து அதற்கான ஒப்புதல்களை நிபந்தனைகளுடன் மாற்றம் செய்து, விதிமுறைகள் மற்றும் வரையறுகளுடனும், இத்துடன் உரிமம் மூலம் பெறப்படும் தொகையை நிர்ணயத்து அளிக்கலாம் அல்லது நிராகரிப்புக்கான காரணங்களை எழுத்துமூலம் குறிப்பிட்டு விண்ணப்பங்களை நிராகரிக்கலாம்.

4. தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் இந்த பிரிவின் கீழ் ஒவ்வொரு ஒப்புதலுக்கும் பொது அறிக்கை வழங்க வேண்டும.

உயிரினவளம் அல்லது அறிவாண்மை பரிமாற்றம்

20. (1) பிரிவு 19ன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட யாதொரு நபரும் உயிரினவளம் அல்லது அது சார்ந்த அறிவாண்மையை தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்தின் ஒப்புதல் பெற்றால் ஒழிய பரிமாற்றம் செய்யலாம்.

(2) உபபிரிவு (1)ன் கீழ் யாதொரு நபரும் உயிரினவளம் அல்லது அதுசார்ந்த அறிவாண்மையை பரிமாற்றம் செய்ய விழைந்தால் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் வரையறுக்கப்பட்ட விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து வழங்க வேண்டும்.

(3) உபபிரிவு (2)ன் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களை தகுதியானவையா என கருத தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் தகுந்த முறையில் விசாரணை மேற்கொண்டு தேவைப்படின்

இதற்கென உருவாக்கப்பட்டுள்ள நிபுணர்குழுவை கலந்தாலோசித்து நிபந்தனைகளுடன் மாற்றம் செய்து, விதிமுறைகள் மற்றும் வரையறுகளுடனும் இத்துடன் உரிமம் மூலம் பெறப்படும் தொகையை நிர்னயித்து ஒப்புதல் அளிக்கலாம் அல்லது நிராகரிப்புக்கான காரணங்களை எழுத்துமூலம் குறிப்பிட்டு விண்ணப்பங்களை நிராகரிக்கலாம்.

பாதிக்கப்பட்ட நபருக்கு விளக்கமளிக்க அவகாசம் தராமல் விண்ணப்பங்களை நிராகரிக்க உத்தரவிடக்கூடாது.

(4) தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம் இந்த பிரிவின் கீழ் ஒவ்வொரு ஒப்புதலுக்கும் பொது அறிக்கை வழங்க வேண்டும்.

சமபயன் பங்கீட்டலை தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்தால் நிர்ணயிக்கப்படும்

21. (1) தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம் பிரிவு 19 அல்லது பிரிவு 20ன் கீழ் ஒப்புதல் அளிக்கும் முன் உயிரின வளத்தின் மூலமும், அதன் உபபொருட்கள் மூலமும், கண்டுபிடிப்புகள் மற்றும் அது சார்ந்த செயல்கள் அதன் பயன் மற்றும் பயன்பாடு மற்றும் அதுசார்ந்த அறிவாண்மையை ஒருமித்த விதிமுறைகள் மற்றும் வரையறைகளுடன் உள்ளாட்சி மன்றம் மற்றும் பயன்பெறவோர் கூட்டாக விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதா என்ற ஆராய வேண்டும்.

(2) சம பயன் பங்கீட்டலை தகுந்த நிபந்தனைகளடன் கீழ்கண்ட அனைத்து அல்லது ஏதேனும் ஒன்றின் மூலம் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் வழங்க வேண்டும்.

(அ) ஆய்வுரிமைக்கான உரிமைகளை தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையத்திற்கும் மற்றும் பயன்பெறுவோர் இடையே கூட்டாக வழங்கபட வேண்டும்.

(ஆ) தொழில்நுட்ப பரிமாற்றம்

(இ) உற்பத்தியிடம், ஆய்வு மற்றும் அபிவிருத்தி மையம் ஆகியவை பயன்பெறுவோர் வாழ்கைத்தரம் உயரவழி வகை செய்யும்.

(ஈ) உயிர்வளம் உயிர்வள ஆய்வு உயிர்வள உபயோகம் பற்றிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பற்றி அறிந்துள்ள இந்திய விஞ்ஞானிகள் உரிமை கொண்டாடுபவர் மற்றும் பொதுமக்களிடையே கூட்டமைப்பு தேவைகளுக்கு

(உ) உரிமை கொண்டாடுபவர்களுக்கான தேவைகளுக்கு முதலீட்டு நிதி ஏற்படுத்தல்.

(ஊ) தகுதியின் அடிப்படையில் உரிமை கொண்டாடுபவர்களுக்கு பணஉதவி மற்றும் இதர உதவிகளை தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம் வழங்கலாம்.

3. பயன்பங்கீட்டலின் மூலம் பணம் பெற கட்டளையிட்டிருந்தால் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் இந்த தொகையை தேசிய பல்லுயிர் பெருக்க நிதியில் சேர்க்க வழிகாட்டலாம்.

உயிரியல் வளம் அல்லது குறிப்பிட்ட நபர், அல்லது நபர்கள் அல்லது நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட அறிவாண்மைக்கு தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் தனிநபர் அல்லது நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு விதிமுறைகள் ஏதேனும் இருந்தால் அதற்கேற்ப நேரடியாக தொகையை வழங்கலாம்.

4. இந்த பிரிவின் செயல்களுக்கான தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் மத்திய அரசாங்கத்தின் ஆலோசனையுடன் நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை அமைக்கலாம்.

## அதிகாரம் - 6

# மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியம்

### மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரிய அமைப்பு :

22(1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மாநில அரசு இதற்கென மாநில அரசினால் தகுந்த குறிப்பாணைகளின் மூலம் அரசிதழில் வெளியிடப்பட்டவாறுள்ள நாளிலிருந்து (மாநிலத்தின் பெயர்) பல்லுயிர்ப்பெருக்க வாரியம் அமைக்க வேண்டும்.

2 இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு விஷயங்களுக்கு குந்தக மன்னியில், ஒரு யூனியன் பிரதேசம் தொடர்பாக அல்லது யூனியன் பிரதேசத்திற்காக மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியம் அமைக்கப்படுதல் கூடாது. அத்தகைய யூனியன் பிரதேசத்தை பொறுத்தவரை தேசிய பல்லுயிர்ப் பெருக்க அதிகார அமைப்பு, ஒரு மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் அதிகாரங்களைச் செயல்படுத்தும்.

மேலும் யாதொரு யூனியன் பிரதேசத்தைப் பொருத்தவரை தேசிய பல்லுயிர்ப் பெருக்க அதிகார அமைப்பு தனது அனைத்து அல்லது யாதொரு அதிகாரங்கள் அல்லது பணிகளை, மத்திய அரசு இது விஷயத்தில் குறிப்பிடும் நபர்கள் அல்லது நபர்களின் குழுவினர் மூலம் செயல்படுத்தலாம்.

3. வாரியமானது, மேற்கண்ட பெயரில் ஒரு நிறுவனமாக கருதப்படுவதோடு, சாஸ்வதமான தொடர்ச்சி, பொதுவான முத்திரை, அசையும் அல்லது அசையா சொத்துக்களை ஊர்ஜிதம் செய்ய ஸ்வரீதீனம் வைத்திருக்க மற்றும் அன்னியாதினம் செய்யவும் ஒப்பந்தங்களில் ஈடுபடவும், மேற்கண்ட பெயரில் வழக்கு தொடுக்க வழக்கில் பிரதிவாதியாக உரிமைப்படைத்தது ஆகும்.

4. வாரியமானது கீழ்கண்ட உறுப்பினர்களை பெற்றிருக்கும் அவையாவது :

(எ) வனப்பாதுகாப்பு மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தின் நிலையான பயன்பாடு மற்றும் பயன்களை சமத்துவ முறையில் பகிர்ந்துகொள்ளுதலில் போதுமான அறிவாண்மையும், அனுபவமும் உடைய மாநில அரசினால் நியமிக்கப்பட வேண்டிய ஒரு சிறந்த நபர் தலைவர் ஆக இருப்பார்.

5. தொடர்புடைய அரசுத்துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் மாநில அரசினால் நியமிக்கப்படும் ஐந்திற்கு மேற்படாத பதவியின் பேராலான உறுப்பினர்கள்.

6. பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு, உயிரியல் வாதத்தை நிலையான முறையில் பயன்படுத்துதல், உயிரியியல் வளத்தை பயன்படுத்துவதில் வரும் பயன்கள் சமத்துவ முறையில் பகிர்ந்துகொள்ளுதல் முதலிய விஷயங்களில் பாண்டித்யம் உடைய நிபுணர்களிலிருந்து ஐந்திற்கும் மேற்படாத உறுப்பினர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

7. மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் தலைமை அலுவலகம் இதற்கென மாநில அரசினால் அரசிதழில் குறிக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்படும்.

மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் பணிகள் :

23. மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் பணிகளாவன :

எ. மத்திய அரசினால் வெளியிடப்படும் யாதொரு விதிமுறைகளுக்கு உட்பட்டு, மாநில அரசுக்கு

பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு, அதன் அங்கங்களின் நிலையான பயன்பாடு, உயிரியியல் வளப்பயன்பாட்டின் மூலம் கிடைக்கும் பயன்களை சமத்துவமுறையில் பகிர்ந்து கொள்ளதல் போன்ற விஷயங்களில் ஆலோசனை அளித்தல்.

பி. இந்தியர்கள் யாதொரு உயிரியல் வளத்தின் மீதான வணிகப் பயன்பாடு போன்றவற்றிற்கு விண்ணப்பம் அளித்திடும் போது அளிக்கப்படும் அனுமதி அல்லது மாறான ஆணைகளை ஒழுங்குபடுத்துதல்.

சி. மேலும் இச்சட்டத்தின் ஷரத்துக்களின் படியான செயல்களை நிறைவேற்றிடத் தேவையான இன்னபிற பணிகள் அல்லது மாநில அரசினால் குறித்துரைக்கப்படும் பணிகளை செயல்படுத்துவது.

சில செயல்களை கட்டுப்படுத்துவதற்கான மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் அதிகாரம்.

24(1) பிரிவு 7இல் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு காரியத்தையும் மேற்கொள்ள எண்ணும் யாதொரு இந்தியக் குடிமகன் அல்லது இந்தியாவில் பதிவு பெற்ற நிறுவனம், அமைப்பு, கழகம், போன்றவைகள் இதற்கென மாநில அரசினால் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்துக்கு தகவல் அளிக்க வேண்டும்.

உ. உட்பிரிவு (1)ன் படியான தகவலை பெற்றவுடன் மாநில ப்லலுயிர்ப் பெருக்க வாரியம், தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுடன் கலந்தாலோசித்து, தேவையான விசாரணைகளை நடத்திய பின்பு தாம் அச்செயல், பல்லுயிர்ப் பெருக்கத்துக்கு தீங்கானது, பல்லுயிர்ப்பெருக்கத்தின் நீடித்த பயனுக்கும், அச்செயலினால் விளையும் பயன்களின் சமத்துவப் பகிர்வுக்கு எதிரானது என்று கருதும்பட்சத்தில், ஆணையின் மூலம் அச்செயலை தடுக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ செய்யலாம்.

இவ்விதத்திலான எவ்வாணையும் பாதிக்கப்பட்ட நபருக்கு விளக்கமளிக்க அவகாசம் தறாமல் விண்ணப்பங்களை நிராகரிக்க உத்தரவிடக்கூடாது.

3. உட்பிரிவு (1)ன் முன்னறிவிப்பு தகவல்களின் யாதொரு விபரமும் ரகசியமாக காக்கப்பட வேண்டும் இதனை சம்பந்தப்படாத யாதொரு நபருக்கும் வேண்டுமென்றோ தெரியாமலோ வெளியிடப்படுதல் கூடாது.

25. கீழ்க்கண்ட மாற்றங்களுக்கு உட்பட்டு பிரிவுகள் 9 முதுல் 17 வரையிலான சட்டத்தில் மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்திற்கும் பயன்படுத்தகூடியவையாகும்.

எ. மத்திய அரசு என்று குறிப்பிடப்படுமிடங்களிலெல்லாம் மாநில அரசு என்று குறிக்கப்பட வேண்டும்.

பி. தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் என்று குறிப்பிடப்படுமிடங்களிளெல்லாம் மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியம் என்று குறிக்கப்பட வேண்டும்.

பிரிவுகள் 9 முதல் 17 வரையிலான சட்டவிதிகள் மாற்றங்களோடு மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்துக்கும் பொருந்தக் கூடியவை.

சி. இந்தியத் தொகுப்பு நிதி என்று குறிப்பிடப்படுமிடங்களிலெல்லாம் மாநிலத் தொகுப்பு நிதி என்று குறிக்கப்பட வேண்டும்.

அதிகாரம் - 7

# தேசிய பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் நிதி, கணக்குகள் மற்றம் தணிக்கை

மத்திய அரசு வழங்கும் நிதி உதவி மற்றும் கடன்கள் 26 பாராளுமன்றத்தின் தகுந்த ஒப்புதலோடு மத்திய அரசு இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு எதுவானதாக கருதும் நிதியை உதவியாகவோ அல்லது கடனாகவோ தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்திற்கு வழங்கலாம்.

தேசியப் பல்லுயிர்ப் பெருக்க நிதியம்

27. தேசிய பல்லுயிர்ப் பெருக்க நிதியம் என்ற அழைக்கப்படும் நிதியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அவற்றில் கீழ்க்கண்ட நிதியாதாரங்கள் செலுத்தப்பட வேண்டும்.

அ. பிரிவு 26ன் கீழ் தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்திற்கு வழங்கப்படும் யாதொரு உதவி மற்றும் கடன்.

ஆ. தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்திற்கு இச்சட்டத்தின் மூலம் பெறப்படும அனைத்து செலுத்துத் தொகையும், உரிமத் தொகையும்.

இ. மத்திய அரசால் தீர்மானிக்கப்படும் இன்ன பிற ஆதாரங்களிலிருந்து தேசிய பல்லுயிர்ப்பெருக்க ஆணையத்தில் பெறப்படும் அனைத்துத் தொகைகளும்.

3. இந்நிதி கீழ்க்கண்ட காரியங்களுக்கு பயன்படுத்தப்படலாம்.

அ. பயனாளிகளுக்கு பயனீட்டுத் தொகை தருவதற்கு

ஆ. உயிரியியல் ஆதாரங்களை பாதுகாப்பதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும், இத்தகைய உயிரியல் ஆதாரங்களை அல்லது அறிவாண்மை கிடைக்கும் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கும்.

இ. உட்பிரிவு (பி) இல் சொல்லப்பட்டபடி உள்ளாட்சி அமைப்புகளின் ஆலோசனையின் பேரில் இத்தகைய உயிரியியல் ஆதாரங்களோ அல்லது தொடர்புடைய அறிவாண்மையோ பெறப்படும் பகுதிகளின் சமூக - பொருளாதார அபிவிருத்திற்காக.

தேசிய பல்லுயிர்ப் பெருக்க வாரிய ஆண்டறிக்கை

28. முந்தைய நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட காரியங்கள் குறித்து முழுமையான விபரங்களோடு ஆண்டறிக்கை தயாரித்து மத்திய அரசால் குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவுக் கணக்குகள் மற்றம் தணிக்கையாளரின் அறிக்கையோடு மத்திய அரசுக்கு தேசியப் பல்லுயிர்ப்பெருக்க வாரியம், பரிந்துரைக்கப்பட்ட படிவத்திலும், காலத்திலும் அளிக்க வேண்டும்.

வரவு செலவுக் கணக்கு மற்றும் தணிக்கை

29 (1) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் வரவு செலவு கணக்குகளை தயாரித்து அதற்குண்டான கணக்குகளையும் இதர ஆவணங்களையும் பாதுகாத்து (தேசிய பல்லுயிர் பெருக்க நிதியின்

கணக்கு மற்றும் இதர ஆவணங்களையும் சேர்த்து) வருடாந்தர வரவு செலவு கணக்குகளை இந்திய பொது தணிக்கையாளருடன் கலந்தாலோசித்து மத்திய அரசாங்கத்தால் இதற்கென கொடுக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

2. தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தின் கணக்குகள் இந்திய தலைமைக் கணக்காயரால், அவரால் குறிக்கப்பட்ட கால இடைவெளியில் தணிக்கைக்கு உள்ளாக்கப்படுவதோடு இது தொடர்பான செலவினங்கள் தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தால் இந்தியத் தலைமைக் கணக்காயருக்க அளிக்கப்பட வேண்டும்.

3. இந்தியத் தலைமைக் கணக்காயரும், தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தின் கணக்குகளை தணிக்கை செய்யும் பொருட்டு அவரால் நியமிக்கப்படும் யாதொரு நபரும், அரசு கணக்குகளை தணிக்கை செய்யும் இந்தியத் தலைமைக் கணக்காயர் குறிப்பாக புத்தகங்கள், கணக்குகள், தொடர்புடைய செலவுப்பட்டியல்கள் இவற்றை தருவிக்கும் உரிமை மற்றும் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் யாதொரு அலுவலகத்தில் சோதனை செய்யும் உரிமை போன்ற அதே உரிமைகளையும், தனியதிகாரத்தையும் பெற்றிருப்பார்கள்.

4. இந்தியத் தலைமைக் கணக்காயராலோ அல்லது இது விஷயத்தில் அவரால் நியமிக்கப்படும் யாதொரு நபராலோ சான்றளிக்கப்பட்ட தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தின் கணக்குகள், தணிக்கை அறிக்கையோடு ஆண்டுதோறும், மத்திய அரசுக்கும் அனுப்பப்படவேண்டும். ஆண்டறிக்கை பாராமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

30. மத்திய அரசு ஆண்டறிக்கையும், தணிக்கையாளரின் அறிக்கையும், அவை பெறப்பட்ட உடன் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் வைக்கப்பட ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதிகாரம் - 8

## மாநில பல்லுயிர்ப் பாதுகாப்பு வாரியத்தின் நிதி, கணக்குகள், மற்றும் தணிக்கை.

### மாநில அரசினால் மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்துக்கு வழங்கப்படும் மானியம்

31. சட்டமன்றத்தின் தகுந்த ஒப்புதலோடு இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு பயன்படுத்த ஏதுவானதாக கருதும் நிதியை உதவியாகவோ கருதும் அல்லது கடனாகவோஇ மாநில அரசு, மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்திற்கு வழங்கலாம்.

மாநில பல்லுயிர்ப் பெருக்க நிதி அமைப்பு

32(1) மாநில பல்லுயிர்ப்பெருக்க நிதி என்று அழைக்கப்படும் நிதியானது அமைக்கப்பட்டு அதில் கீழ்க்கண்ட நிதியாதாரங்கள் செலுத்தப்படவேண்டும்.

அ. மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்திற்கு பிரிவு 31ன் படி வழங்கப்படும் யாதொரு நிதி உதவி அல்லது கடன்கள்

ஆ. தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் வழங்கும் யாதொரு நிதி உதவி அல்லது கடன்கள்.

இ. மாநில அரசால் தீர்மானிக்கப்படும் மற்ற பிற ஆதாரங்களிலிருந்து பெறப்படும் அனைத்துத் தொகைகளும்.

2. மாநில பல்லுயிர்ப் பெருக்க நிதியானது கீழ்க்கண்டவற்றுக்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

அ. பாரம்பரிய இடங்களை நிர்வாகம் செய்யவும் பாதுகாக்கவும்.

ஆ. உட்பிரிவு (1) பிரிவு 37ன்படி வெளியிடப்படும் அறிக்கையால் பொருளாதார ரீதியில் பாதிப்படையும் சமுதாயத்தின் யாதொரு பிரிவினரின் இழப்பீடாகவும், மறுவாழ்விற்காகவும்,

இ. உயிரியியல் ஆதாரங்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும்.

ஈ. பிரிவு 24ன் கீழ் வெளியிடப்படும் யாதொரு உத்தரவுக்கு உட்பட்டு உரிய உள்ளாட்சி அமைப்புகளின் ஆலோசனையின் பேரில் இத்தகைய உயிரியியல் ஆதாரங்களோ அல்லது தொடர்புடைய அறிவாண்மையோ பெறப்படும் பகுதிகளின் சமூக - பொருளாதார அபிவிருத்திற்காக.

உ. இச்சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்வதற்கு.

மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரிய ஆண்டறிக்கை

33. ஒவ்வொரு, நிதியாண்டிலும், மாநில பல்லுயிர்ப்பெருக்க வாரியமானது, பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் காலத்தில் முந்தைய நிதியாண்டில் தனது செயல்பாடுகள் குறித்த முழு விபரங்களோடு தனது ஆண்டறிக்கையை தயாரித்து அதன் ஒரு பிரதியை மாநில அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுதல்

34. மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் கணக்குகள் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் மாநில தலைமைக் கணக்காயரின் ஆலோசனையின் பேரில் பராமரிக்கப்பட்டு தணிக்கை செய்யப்படுவதோடு, மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியமானது பரிந்துரைக்கப்படும் தேதிக்கு முன்னதாக தனது கணக்குகளில் தணிக்கை செய்யப்பட்ட பிரதியுடன் அதன் பேரினாலான தணிக்கையாளரின் அறிக்கையை இணைத்து மாநில அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரிய ஆண்டறிக்கை மாநில சட்டசபையில் வைக்கப்பட வேண்டும்.

35. ஆண்டறிக்கையும், தணிக்கையாளரின் அறிக்கையும் பெறப்பட்ட உடன் மாநில அரசு அவற்றை மாநிலச் சட்டசபையில் வைத்திடச் செய்ய வேண்டும்.

## அதிகாரம் - 9

## மத்திய, மாநில அரசுகளின் கடமைகள்

பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு முதலிய காரணங்களுக்காக மத்திய அரசு தேசிய நடவடிக்கைகள், மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

36(1) மத்திய அரசு, உயிரியல் வளங்கள் மிகுந்த இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் கண்காணித்தல் போன்றவற்றுக்கான வழிமுறைகள், உள்ளிடை (in-situ) மற்றும் வெளியிடை (ex-situ) முறையில் அபிவிருத்தி செய்தல், உயிரியல் வளத்தை பாதுகாத்தல், ஆய்வு, பயிற்சி மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்தும் பொதுக்கல்விக்கு ஊக்கமளித்தல் உள்ளிட்ட பல்லுயிர்ப்பெருக்க பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் நீடித்த பயன்பாட்டிற்காக தேசிய நடவடிக்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை மேம்படுத்த வேண்டும்.

2. மத்திய அரசு, யாதொருவிடத்திலும், பல்லுயிர்ப் பெருக்கம் மிகுந்த யாதொரு உயிரியல் வளம் மிகுந்த பகுதி மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் அதிகமான உபயோகம், தவறாக பயன்படுத்துதல் அல்லது உதாசீனம் செய்யப்படுவதால் பாதிப்படையும் என்று நம்பத்தகுந்த காரணங்களிருக்கும் பட்சத்தில் தொடர்புடைய மாநில அரசுக்கு உடனடியாக தீர்வுக்கான வழிமுறைகளை எடுக்க ஆணைகள் பிறப்பிக்கவும் அம்மாநில அரசுக்கு இயன்ற அல்லது தேவையான தொழில்நுட்ப அல்லது பிற உதவிகளை செய்ய வேண்டும்.

3. மத்திய அரசு எவ்விடத்திலும் தான் உகந்ததென்று கருதும்பட்சத்தில் நடைமுறை சாத்தியாமான அளவு, பல்லுயிர்ப்பெருக்கப் பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் நிலையான பயன்பாட்டினை ஒருங்கிணைத்து தொடர்புடைய துறைசார் அத்துறைகளுக்கிடையிலான திட்டங்களாகவும், நிகழ்ச்சிகளாகவும் கொள்கைகளாகவும் வடிவமைக்கலாம்.

4. மத்திய அரசு கீழ்க்கண்ட வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

(i) தேவையான இடங்களில் பல்லுயிர்ப்பெருக்கத்தின் மீது எதிரிடை விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களின் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டிற்கு வழிவகை செய்வதோடு தொடர்புடைய இடங்களில் இத்தகைய மதிப்பீட்டில் பொதுமக்கள் பங்கேற்புக்கு வழிவகை செய்ய வேண்டும்.

(ii) பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு மற்றும் மனித சுகாதாரம் போன்றவற்றின் மீது எதிரிடை விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய உயிர் தொழில் நுட்பத்தினால் கிடைக்கப்பெற்ற மாற்றியமைக்கப்பட்ட உயிர்வாழ்வுகளின் பயன்பாடு மற்றும் வெளியீட்டினால் ஏற்படும் ஆபத்துக்களை ஒழுங்குபடுத்தவும், நிர்வாகம் செய்யவும் அல்லது கட்டுப்படுத்தவும் வேண்டும்.

5. மத்திய அரசு பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த உள்ளூர் மக்களின் அறிவாண்மையை மதிக்கவும், பாதுகாக்கவும் அக்கறைகொள்ள முயலவேண்டும் என்பதோடு தேசிய பல்லுயிர்ப்பெருக்க ஆணையம் பரிந்துரைத்தவாறு இத்தகைய அறிவாண்மையை உள்ளூர், மாநில மற்றும் தேசிய அளவில் பதிவு செய்தல் மற்றும் சுய, - தனித்தன்மையான முறை உள்ளிட்ட பாதுகாப்பு முறைகள் உள்ளிட்ட வழிமுறைகளின் மூலம் இவற்றை செய்ய வேண்டும்.

விளக்கம் - இச்சட்டப்பிரிவின் நோக்கங்களுக்காக...

எ. வெளியிடைப் பாதுகாப்பு என்றால் தமது இயற்கை வாழ்விடங்களுக்கு வெளியில் உள்ள பல்லுயிர்பெருக்க அங்கங்களின் பாதுகாப்பாகும்.

பி. உள்ளிடைப் பாதுகாப்பு என்றால் இயற்கையான சுற்றுச் சூழலில் உள்ள உகந்த இணக்கூட்டங்களின் பராமரிப்பு மற்றும் சுற்றுசூழல் மற்றும் இயற்கை வாழ்விடங்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ப்பு அல்லது பயிரிடப்படும் இனங்களை பொருத்தவரை அவைகள் தமது தனித்தன்மைகளை பெற்ற இடங்கள்.

பல்லுயிர்ப்பெருக்க பாரம்பரிய இடங்கள்

37(1) தற்சமயம் அமலிலிருக்கும் யாதொரு சட்டத்திற்கும், குந்தக மன்னியில் மாநில அரசானது ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்ளாட்சி அமைப்புகளோடு கலந்தாலோசித்து, பல்லுயிர்ப் பெருக்க முக்கியத்துவம் உடைய இடங்களை பல்லுயிர்ப் பெருக்க பாரம்பரிய இடங்களாக இச்சட்டத்தின் கீழ் அரசிதழில் அறிக்கை வெளியிடுவதின் மூலம் அறிவிக்கலாம்.

2. மாநில அரசு, மத்திய அரசோடு கலந்தாலோசித்து அனைத்து பாரம்பரிய இடங்களையும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பதற்கான விதிகளை வகுக்கலாம்.

3. மாநில அரசு, இத்தகைய அறிக்கையினால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படும யாதொரு அல்லது மக்கட்பிரிவினரின் இழப்பீட்டிற்காகவும், மறுவாழ்விற்காகவும் திட்டங்களை வடிவமைக்கலாம்.

அழிந்து வரும் இனங்களை அறிவிப்பதற்கான மத்திய அரசின் அதிகாரம்

38. மத்திய அரசு, தற்போது அமலிலிருக்கும் யாதொரு சட்டத்தின் விதிகளுக்கு குந்தகமன்னியில், தொடர்புடைய மாநில அரசோடு கலந்தாலோசித்து, ஒவ்வொரு காலகட்டத்திலும் அழிவின் விளம்பிலிருக்கும் அல்லது குறுகிய எதிர்காலத்தில் அழிந்து போகக்கூடிய இனங்களை அழிந்து வரும் உயிரினமாக அறிவிக்கலாம் அல்லது யாதொரு காரணத்திற்க்காகவும் அவற்றை சேகரிப்பதை தடுக்கவோ அல்லது ஒழுங்குபடுத்தவோ செய்வதுடன் அத்தகைய இனங்களை மறுவாழ்வு செய்யவும் பாதுகாக்கவும் தகுந்த எற்பாடுகளை செய்யலாம்.

களஞ்சியம் என்று பெயரிடுவதற்கான மத்திய அரசின் அதிகாரம்

39(1) மத்திய அரசு தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்துடன் கலந்தாலோசித்து இச்சட்டத்தின் கீழ் பல்வேறு வகை உயிரியியல் வளங்களுக்கான களஞ்சியங்களை பெயரிடலாம்.

2. இக்களஞ்சியங்கள் அவற்றில் செலுத்தப்பட்ட மாதிரிகள் உள்ளிட்ட உயிரியில் பொருட்களை பாதுகாக்க வேண்டும்.

3. யாதொரு புதிய உயிரினத்தை கண்டுபிடிக்கும் யாதொரு நபரும் இந்நோக்கங்களுக்காக பெயரிடப்பட்டுள்ள யாதொரு நிறுவனம் அல்லது களஞ்சியத்திற்கும் தெரிவிக்கப்படுவதோடு அந்நபர் அதற்கான மாதிரிகளை இத்தகைய நிறுவனங்களிலோ அல்லது களஞ்சியங்களிலோ ஒப்படைக்க வேண்டும்.

சில உயிரியல் வளங்களுக்கு விலக்களிக்கும் மத்திய அரசின் அதிகாரம்

40. மத்திய அரசு, இச்சட்டத்தில் கண்டிக்கும் யாதொரு விஷயங்களண்ணியில், தேசிய பல்லுயிர்ப் பெருக்கவாரியத்துடன் கலந்தாலோசித்து, அரசிதழ் அறிவிக்கை வெளியிடுவதின் மூலம் சாதாரணமாக விற்பனை பொருட்களாக பயன்படுத்தப்படும் உயிரியில் வளங்கள் உள்ளிட்ட யாதொரு பொருளுக்கும் இச்சட்டத்தின் விதிகள் பொருந்தாது என்று அறிவிக்கலாம்.

## அதிகாரம் - 10

# பல்லுயிர்ப் பெருக்க நிர்வாகக் குழுக்கள்.

### பல்லுயிர்ப் பெருக்க நிர்வாகக் குழு அமைப்பு

41(1) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் தத்தமது எல்லைக்குள் பல்லுயிர் பாதுகாப்பு நிலையான பயன்பாடு மற்றும் வாழ்விடங்களை பராமரித்தல், நில இனங்கள், நாட்டுப்புற வகைகள் பயிரிடு இனங்கள், வளர்ப்புக்காக பயன்படுத்தப்படும் விலங்குகளும், கால்நடை இனங்களும், மற்றும் நுண்ணுயிர்களை பாதுகாத்தல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் தொடர்பான அறிவாண்மையை பதிவு செய்தல் உள்ளிட்ட பல்லுயிர்ப் பெருக்க ஆவணப்பதிவு போன்றவற்றை பாதுகாத்து வளர்ப்பதற்கு ஒரு பல்லுயிர்ப்பெருக்க நிர்வாகக் குழுவினை அமைத்திட வேண்டும்.

விளக்கம் - இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக

எ. பயிரிடு இனம் என்பது விவசாயத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தொடர்ந்து வளர்க்கப்பட்ட தாவரம் அல்லது விவசாயத்திற்காக சிறப்பாக வளர்க்கப்பட்ட தாவரம்.

பி. நாட்டுப்புற வகை என்பது எதேச்சையாக விவசாயிகள் தங்களுக்குள்ளாகவே அபிவிருத்தி செய்து, வளர்த்து, பரிமாற்றம் செய்து கொண்ட ஒரு தாவரத்தின் பயிரிடப் பயன்படுத்தப்படும் வகை ஆகும்.

சி. நில இனம் என்பது பழங்கால விவசாயிகளாலும் அவர்களது வழிவந்தவர்களாலும் வளர்க்கப்பட்ட முதல்நிலை பயிரிடு இனம் ஆகும்.

2. தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் மற்றும் மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியங்கள், பல்லுயிர்ப் பெருக்க நிர்வாகக் குழுக்களின் எல்லைக்குள் அமைந்துள்ள உயிரியல் வளம் மற்றும் அது தொடர்பான அறிவுப்பயன்பாடு குறித்து யாதொரு முடிவு எடுக்கும்போது அவற்றை கலந்தாலோசிக்க வேண்டும்.

3. பல்லுயிர்ப் பெருக்க நிர்வாகக் குழுக்கள் தமது எல்லைக்குள் அமைந்துள்ள பகுதிகளிலிருந்து வணிக நோக்கங்களுக்காக யாதொரு உயிரியல் வளங்களையும் சேகரிக்கும் அல்லது அணுகும் யாதொரு நபரிடத்திலிருந்து கட்டணமாக ஒரு தொகையை வசூல் செய்யலாம்.

## அதிகாரம் - 11

# உள்ளூர் பல்லுயிர்ப் பெருக்க நிதியம்

42. சட்டமன்றத்தின் தகுந்த ஒப்புதலோடு, இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு பயன்படுத்த ஏதுவானதாக கருதும் நிதியை உதவியாகவோ அல்லது கடனாகவோ மாநில அரசு, மாநில சட்டமன்றத்தின் தகுந்த ஒப்புதலோடு உள்ளூர் பல்லுயிர் பெருக்க நிதியத்திற்கு வழங்கலாம்.

உள்ளூர் பல்லுயிர்ப் பெருக்க நிதியத்தின் அமைப்பு

43(1) மாநில அரசால் அறிவிக்கப்பட்ட யாதொரு உள்ளாட்சி அமைப்பு செயல்படுமிடங்களிலெல்லாம் உள்ளூர் பல்லுயிர்ப் பெருக்க நிதியம் என்றழைக்கப்படும் நிதியம் அமைக்கப்படுமே. கீழ்க்கண்ட தொகைகள் அதில் செலுத்தப்பட வேண்டும்.

எ. பிரிவு 42ன் கீழ், யாதொரு நிதிஉதவி அல்லது கடன்கள்

பி. தேசியப் பல்லுயிர்ப்பெருக்க ஆணையத்தால் வழங்கப்பட்ட யாதொரு நிதிஉதவி அல்லது கடன்கள்.

சி. மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தால் வழங்கப்பட்ட யாதொரு நிதிஉதவி அல்லது கடன்கள்.

டி. பல்லுயிர்ப் பெருக்க நிர்வாகக் குழுவால் பிரிவு 31 உட்பிரிவு (3)ன் கீழ் பெறப்படும் கட்டணம்.

இ. மாநில அரசினால் தீர்மானிக்கப்பட்ட இன்னபிற ஆதாரங்களிலிருந்து உள்ளூர் பல்லுயிர்ப் பெருக்க நிதியத்தால், பெறப்படும் அனைத்து தொகைகள்.

உள்ளூர்ப் பல்லுயிர்ப் பெருக்க நிதியத்தின் பயன்பாடு

44(1) உட்பிரிவு (2)ன் விதிமுறைகளுக்கு உட்பட்டு, உள்ளூர்ப் பல்லுயிர்ப் பெருக்க நிதியத்தின்

நிர்வாகம் மற்றும் பாதுகாப்பும் மற்றும் இத்தகைய நிதி பயன்படுத்தப்படுவதற்கான நோக்கங்கள் மாநில அரசால் பரந்துரைக்கப்படும் முறையில் இருக்க வேண்டும்.

2. இந்நிதியம் - தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள பகுதிகளில் பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்புக்கு உகந்ததாக இருக்கம் பட்சத்தில், பயன்படுததப்பட வேண்டும்.

பல்லுயிர்ப்பெருக்க நிர்வாகக் குழுக்களின் ஆண்டறிக்கை

உள்ளுர் பல்லுயிர்ப் பெருக்க நிதியத்திற்கு பொறுப்பான நபர் பரிந்துரைக்கப்பட்ட வடிவம் மற்றும் கால அளவில் ஒவ்வொரு நிதியாண்டின் போதும் முந்தைய நிதியாண்டிற்கான செயல்பாடுகளின் முழு விவரங்களைக் கொண்ட ஆண்டறிக்கை ஒன்றை தயாரித்து அதன் ஒரு பிரதியை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

பல்லுயிர்ப் பெருக்க நிர்வாகக் குழுக்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுதல்

46. உள்ளுர் பல்லுயிர்ப் பெருக்க நிதியத்தின் கணக்குகள் மாநிலத் தலைமைக் கணக்காயரின் ஆலோசனையின் பேரில் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் பராமரிக்கப்பட்டு தணிக்கை செய்யப்படுவதுடன் உள்ளுர் பள்லுயிர் பெருக்க நிதியத்திற்கு பொறுப்பான நபர், பரிந்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக இதன் தணிக்கை கணக்குகளும் மற்றும் அதன் பேரிலான தணிக்கையாளரின் அறிக்கையும் இணைத்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பிடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**பல்லுயிர்ப் பெருக்க நிர்வாகக் குழுவின் ஆண்டறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

47. பிரிவு 41 உட்பிரிவு 41ன் கீழ் பல்லுயிர்ப்பெருக்க நிர்வாகக் குழுவை அமைக்கும் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் பிரிவுகள் 45 மற்றும் 46இல் சொல்லப்பட்ட ஆண்டறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் அதன் பேரிலான தணிக்கையாளரின் அறிக்கையும் அவ்வுள்ளாட்சி அமைப்பின் அதிகாரம் உடைய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

## அதிகாரம் - 12
## மற்றவை (இதர)

தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் மத்திய அரசின் ஆணைகளில் பேரில் நடக்க வேண்டும்

48(1) இச்சட்டத்தின் மேற்கண்ட விதிகளுக்கு குந்தகமண்ணியில், தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம், இச்சட்டத்தின் கீழான தமது பணிகள் மற்றும் கடமைகளில், மத்திய அரசு ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுத்துபூர்வமாக அளிக்கும் கொள்கை தொடர்புடைய அத்தகைய ஆணைகளுக்கு உட்பட்டதாகும்.

இருப்பினும், தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்திற்கு, நடைமுறைக்கு சாத்தியமான அளவு, இவ்வுட்பிரிவின் கீழ் யாதொரு ஆணைகளும் பிறப்பிக்கப்படுமுன்னால் தமது கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

2. ஒரு கேள்வியானது கொள்கை சம்பந்தப்பட்டதா இல்லையா என்று தீர்மானிக்கும் மத்திய அரசின் முடிவே இறுதியானது ஆகும்.

ஆணைகள் இடுவதற்கான மாநில அரசின் அதிகாரம்

49(1) இச்சட்டத்தின் மேற்கண்ட சட்டவிதிகளுக்கு குந்தகமன்னியில், மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியமானது, இச்சட்டத்தின் கீழான தனது பணிகள் மற்றும் கடமைகளில் மாநில அரசு ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுத்துப்பூர்வமாக அவ்வப்போது அளிக்கும் கொள்கை தொடர்புடைய அத்தகைய ஆணைக்கு உட்பட்டதாகும்.

இருப்பினும், மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியத்திற்கு, நடைமுறைக்கு சாத்தியமான அளவு, இவ்வுட்பிரிவின் கீழ் யாதொரு ஆணைகளும் பிறப்பிக்கப்படு முன்னால் தனது கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படும்.

2. ஒரு கேள்வியானது கொள்கை சம்பந்தப்பட்டதா இல்லையா என்று தீர்மானிக்கும் மாநில அரசின் முடிவே இறுதியானது ஆகும்.

மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு தீர்வு

50(1) தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்திற்கும், ஒரு மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியத்திற்குமிடையே ஒரு பிரச்சனை எழும் பட்சத்தில், அவ்வாணையம் அல்லது வாரியம் பரிந்துரைக்கப்படும் நாளுக்குள் மத்திய அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

2. உட்பிரிவு 1ன் கீழான ஒவ்வொரு முறையீடும் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் இருக்க வேண்டும்.

3. ஒரு முறையீட்டிற்கு தீர்வு காணும் நடைமுறை மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் இருக்க வேண்டும். எனினும் முறையீடு முடிவு செய்யப்படு முன்னர், தரப்பினர் தமது கருத்துக்களைச் சொல்ல நியாயமான வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

4. மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியங்களுக்கிடையில் ஒரு பிரச்சினை எழும்போது, மத்திய அரசு, தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்திற்கு இதனை பரிந்துரைக்க வேண்டும்.

5. உட்பிரிவு 4ன் கீழ் யாதொரு பிரச்சினையையும் தீர்மானிக்கையில் தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் இயற்கை நீதித் தத்துவங்களினால் வழிநடத்தப்படுவதுடன் மத்திய அரசால் பரிந்துரைக்கப்படும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

6. கீழ்க்கண்ட விஷயங்களில், இப்பிரிவின் கீழான பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் ஒரு உரிமையியல் நீதிமன்றம், உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 கீழ் பெற்றிருக்கும் அதே அதிகாரங்களை பெற்றிருக்கும்.

எ. யாதொரு நபருக்கும் அழைப்பாணை அனுப்பவும் அவரது வருகையை வற்புறுத்தவும், உறுதிமொழியின் கீழ் அவரை விசாரணை செய்யவும்,

பி. ஆவணங்களைக் கண்டுபிடிக்க ஆஜர் செய்ய வேண்டுதல்.

சி. பிரமாணத்தின் பேரில் சாட்சியங்களைப் பெறுதல்

டி. சாட்சிகள் அல்லது ஆவணங்களை விசாரிக்க / பரிசோதிக்க ஆணைகள் பிறப்பித்தல்.

இ. தனது முடிவுகளை மறுபரிசீலனை செய்தல்,

எப். வருகை தவறுதலுக்காக ஒரு மனுவை தள்ளுபடி செய்தல் அல்லது அவர்களில்லாமல் தீர்மானித்தல்.

ஜி. வருகை தவறுதலுக்காக தள்ளுபடி செய்யப்பட்ட மனு அல்லது அதன் மீது பிறப்பிக்கப்பட்ட யாதொரு ஆணையின் பேரிலான உத்தரவை தள்ளி வைத்தல்.

எச். பரிந்துரைக்கப்படும் இன்னபிற விஷயங்கள்.

7. தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தின் முன்பாக ஒவ்வொரு வழக்கும் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 193 மற்றும் 228ன் படியும் பிரிவு 196ன் நோக்கங்களுக்காகவும் ஒரு நீதிமன்ற வழக்காக கருதப்படவேண்டுவதுடன் தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973ன் பிரிவு 195 மற்றும் அதிகாரம் 26ன் நோக்கங்களுக்காக ஒரு உரிமையியல் நீதிமன்றமாக கருதப்படும்.

தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் மற்றும் மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியம் இவற்றின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் முதலியோர் பொது ஊழியர்களாக கருதப்படுவார்கள்.

51. தேசியப்பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் மற்றம் மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் அனைத்து உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பிற ஊழியர்கள் இச்சட்டத்தின் யாதொரு விதிகளின் கீழ் பணியாற்றுகையில் அல்லது பணியாற்றுவதாக தோன்றுகையில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 21ன் கீழான விளக்கத்தின்படி பொது ஊழியர்களாக கருதப்பட வேண்டும்.

மேல்முறையீடு

52. இச்சட்டத்தின் கீழ் தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் அல்லது ஒரு மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் பயன்பாட்டுப் பிரிவினையின் பேரிலான தீர்ப்பு அல்லது உத்தரவின் மூலம் பாதிக்கப்படும் யாதொரு நபரும் அத்தீர்மானம் அல்லது உத்தரவு தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் அல்லது மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் மூலம் தனக்க கிடைத்த முப்பது நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

இருப்பினும், உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டாளர் மேற்குறிப்பிட்ட காலத்திற்கும் மேல்முறையீடு செய்ய தடை செய்யப்பட்டிருப்பதற்கு போதுமான காரணங்கள் உண்டு என்று திருப்தியடையும் பட்சத்தில், அம்மேல்முறையீடு 60 நாட்களுக்கு மேற்படாத கூடுதலான காலத்தில் தாக்கல் செய்ய அனுமதிக்கலாம்.

தீர்ப்பு அல்லது உத்தரவு நிறைவேற்றுதல்

53. இச்சட்டத்தின் கீழ் தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் அல்லது ஒரு மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியம் அளித்திட்ட பயன்பாட்டு பகிர்வின் பேரிலான ஒவ்வொரு தீர்ப்பு உத்தரவு அல்லது உயர்நீதிமன்றத்தால் தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் அல்லது மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் தீர்ப்பு அல்லது உத்தரவின் பேரில் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் வழங்கப்பட்ட ஆணை, தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் அல்லது மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் யாதொரு அலுவலர் அல்லது உயர்நீதிமன்றம் நீதிமன்றத்தின் தீர்ப்பாணையாக கருதப்படுவதுடன் அந்நீதிமன்றத்தின் தீர்ப்பாணை நிறைவேற்றப்படும் விதத்திலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

விளக்கம் :

இப்பிரிவு மற்றும் பிரிவு 52ன் நோக்கங்களுக்காக, மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியம் என்பது பிரிவு 22 உட்பிரிவு 2 கீழ் வரும் அதிகாரங்கள் அப்பிரிவின் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் நபர் அல்லது நபர்களின் குழு அந்நபர் அல்லது நபர்களின் குழுவுக்கான சான்றிதழ், இப்பிரிவின் கீழ் அந்நபர் அல்லது நபர்களின் குழுவால் வழங்கப்படும்.

நன்னம்பிக்கையில் எழுதப்படும் முடிவுகளுக்கு பாதுகாப்பு

54. இச்சட்டம் அல்லது இதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகள் அல்லது விதிமுறைகளின் கீழ், நன்னம்பிக்கையில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட எண்ணியிருந்த யாதொரு காரணத்திற்காகவும் மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது இவற்றின் அலுவலர்கள் அல்லது தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் அல்லது மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் யாதொரு உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியரின் பேரில் எவ்வித வழக்கோ, உரிமையியல் கோரிக்கையோ அல்லது பிற சட்டம் பூர்வமான நடவடிக்கையோ தொடர முடியாது.

தண்டனைகள்

55(1) பிரிவு 3 அல்லது 4 அல்லது 6ஐ மீறுதல் அல்லது மீறலுக்கு உடந்தையாயுள்ள யாதொரு நபரும் ஐந்து ஆண்டுகள் நீட்டிக்கப்படக்கூடிய காலத்திற்கு சிறைத்தண்டனையோ அல்லது 10 லட்சம் ரூபாய் வறையிலான அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப்படுவதுடன் விளைவிக்கப்பட்ட சேதம் பத்து லட்ச ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் இந்த அபராதம் அதற்கு தக்கவாறும் அல்லது இவ்விரண்டு தண்டனைகளும் விதிக்கப்படுவர்.

2. பிரிவு (7)ன் கீழான விதிமுறைகள் அல்லது பிரிவு 24 உட்பிரிவு (2)ன் கீழான யாதொரு ஆணையின் மீறுதல், மீறச் செய்யும் முயற்சி அல்லது உடந்தையாயிருந்ததுக்கு யாதொரு நபரும் மூன்று வருட காலம் வரையிலான சிறைத்தண்டனை அல்லது ஐந்து லட்சம் அளவிலான அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படுவார்கள்.

மத்திய, மாநில அரசுகள், தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் மற்றும் மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் ஆணைகள் மற்றும் உத்தரவுகள் மீறப்படும் போதான தண்டனைகள்.

56. தனியாக எவ்விதத் தண்டனையும் இச்சட்டத்தில் குறிப்பிடப்படாத நிலையில் மத்திய அரசு, மாநில அரசு, தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் அல்லது மாநிலப் பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் ஆணைகள் அல்லது உத்தரவுகளை மீறும் யாதொரு நபரும் ஒரு லட்சம் ரூபாய் அபராதத்துடன் கூடிய தண்டனையோ, இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றமாக இருப்பின், இரண்டு லட்சம் ரூபாய் அபராதத்துடன் கூடிய தண்டனையோ மற்றும் தொடர்ச்சியான சட்டமீறலாக இருந்தால் இத்தவறு தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலான கூடுதல் அபராதமோ விதிக்கப்படுவார்கள்.

நிறுவனங்கள் செய்யும் குற்றங்கள்

57(1) இச்சட்டத்தின்படியான குற்றம் அல்லது சட்டமீறல் ஒரு நிறுவனத்தினால் செய்யப்படும் யாதொருவிடத்திலும் அந்நிறுவனத்தின் வணிகத்தை நடத்தும் பொறுப்பில் அக்குற்றம் அல்லது சட்டமீறல் நடந்த நேரத்தில் இருந்த ஒவ்வொரு நபரும் மற்றும் அந்நிறுவனமும் அக்குற்றம் அல்லது சட்டமீறலுக்கு

காரணம் என்று கொள்ளப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் தொடரப்பட்டு அதன்படி தண்டிக்கப்படுவார்கள்.

இருப்பினும், அந்நபர் அக்குறிப்பிட்ட குற்றம் அல்லது சட்டமீறல் தமது அறிவாண்மைக் கெட்டாவகையில் நடந்தது என்றோ அக்குற்றம் அல்லது சட்டமீறல் நிகழாவண்ணம் எல்லா ஏற்பாடுகளையும் செய்தேன் என்றோ நிரூபிக்கும் இடத்தில் இவ்வுட்பிரிவின் கீழான எதுவும் இத்தகைய நபர் எவரையும் தண்டனைக்கு உள்ளாக்காது.

2. உட்பிரிவு (1) கண்டுள்ள யாதொரு விஷயங்களையும் இச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றம் அல்லது சட்டமீறல் ஒரு நிறுவனத்தால் நடத்தப்பட்டிருந்து, இத்தகைய குற்றம் அல்லது சட்டமீறல் அந்நிறுவனத்தின் யாதொரு இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர்களின் சம்மதத்துடன், அவர்களுக்கு தெரிந்து, அவர்களுக்கு தொடர்புள்ள வகையில் அல்லது அவர்களது அஜாக்கிரதையால் நடத்தப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்பட்டால் இத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது நிறுவனத்தின் பிற அலுவலர் அத்தகைய குற்றம் அல்லது சட்டமீறலை செய்திருப்பதாக கருதுப்படுவதுடன் அவர்களுக்கெதிராக நடவடிக்கைகள் தொடரப்பட்டு அதன்படி தண்டிக்கப்படுவார்கள்.

விளக்கம் : இப்பிரிவின் நோக்கங்களுக்காக ....

எ. நிறுவனம் என்பது யாதொரு பதிவு பெற்ற அமைப்பையும் ஒரு அமைப்பு அல்லது தனிநபர் கழகங்களையும் குறிப்பதாகும்.

பி. இயக்குநர் என்பது ஒரு அமைப்பு பொறுத்த அளவில் ஒரு பங்குதாரரை குறிப்பதாகும்.

பிணையில் விடமுடியாத குற்றங்கள்

58. இச்சட்டத்தின் கீழான குற்றங்கள் பிணையில் விட இயலாத குற்றங்களாகும்.

பிற சட்டங்களுடன் இச்சட்டத்தின் செயல்பாடு

59. வனங்கள் அல்லது கானுயிர் தொடர்பான தற்போது அமலிலிருக்கும் யாதொரு சட்டத்திற்கும் குந்தகமண்ணிலில் இச்சட்டவிதிகள் அவற்றிற்கு கூடுதலாக செயல்படும்.

மாநில அரசுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கும் மத்திய அரசின் அதிகாரம்

60. இச்சட்டப்பிரிவுகள் அல்லது அவற்றின் கீழ் வரையப்படும் யாதொரு விதிகள், ஒழுங்குமுறைகள் அல்லது உத்தரவுகளை மாநிலத்தில் செயல்படுத்தும் பொருட்டு யாதொரு மாநில அரசுக்கும், மத்திய அரசு உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

குற்றங்களை கணக்கிலெடுத்துக்கொள்ளுதல்

61. கீழ்க்கண்ட முறையில் செய்யப்பட்டிருக்கும் முறையீடுகளின் பேரிலன்றி யாதொரு நீதிமன்றமும் இச்சட்டத்தின் கீழான யாதொரு குற்றத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ளக் கூடாது.

எ. மத்திய அரசு அல்லது இவ்விசயத்தில் அவ்வரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு ஆணையம் அல்லது அதிகாரி அல்லது.

பி. யாதொரு பயனீட்டு கோரிக்கையாளர் 30 நாட்களுக்கு குறையாதவாறு பரிந்துரைக்கப்பட்ட முறையில் மத்திய அரசு அல்லது மேற்குறிப்பிட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட ஆணையம் அல்லது அதிகாரிக்கு முறையீடு செய்தால்

62. (1) அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதன் மூலம் மத்திய அரசு இச்சட்டத்தின் நோக்கங்களை செயல்படுத்தும் பொருட்டு விதிகளை உருவாக்கலாம்.

(2) குறிப்பாக, மேற்குறிப்பிட்ட அதிகாரங்களின் பொதுத்தன்மைக்கு குந்தகமன்னியில் இத்தகைய விதிகள் கீழ்கண்ட அனைத்து அல்லது யாதொரு விஷயம் குறித்து உருவாக்கப்படலாம். அவை

எ. பிரிவு 9இன் கீழ் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிகாலம் குறித்த விதிமுறைகளும் வரையறுகளும்.

பி. பிரிவு 10ன் படி ஆணையத் தலைவரின் அதிகாரம் மற்றும் பணிகள்

சி. பிரிவு 12ன் உப-பிரிவு (1)ன் கீழ் வாணிப நடவடிக்கை குறித்த விதிமுறைகள்.

டி. பிரிவு 19ன் உபபிரிவு (2)ன் கீழ் மேற்கொள்ளவிருக்கும் சில செயல்களுக்கு கட்டணம் செலுத்த கூடிய விண்ணப்ப படிவம்

இ. பிரிவு 19ன் உபபிரிவு (2)ன் கீழ் விண்ணப்பம் செய்யும் முறை

எப். பிரிவு 20 உட்பிரிவு (2)ன்படி உயிரியல் வளம் அல்லது அறிவை மாற்றம் செய்வதற்கான விண்ணப்ப படிவமும் நடைமுறையும்.

ஜி. பிரிவு 28ன்படி தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தின் ஆண்டறிக்கை, தயாரித்தளிக்கப்பட வேண்டிய படிவமும், ஒவ்வொரு நிதியாண்டிலும் அவை தயாரிக்கப்பட வேண்டிய சமயமும், அதன் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும் அவற்றின் மீதான தணிக்கையாளர் அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாளும்.

எச். பிரிவு 29 உட்பிரிவு (1)ன்படி ஆண்டுக் கணக்கு அறிக்கை தயாரித்தளிக்கப்பட வேண்டிய படிவம்.

ஐ. பிரிவு 50ன் படி ஒரு மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுவதற்கான காலம் மற்றும் படிவம் ஒரு மேல்முறையீடு பைசல் செய்யப்படுவதற;கான நடைமுறைகளும் நீதிமன்ற நடைமுறைகளும்.

ஜெ. பிரிவு 50 உட்பிரிவு (6) விதி (எச்)ன்படி தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்களை செயல்படுத்தக்கூடிய கூடுதல் விஷயங்கள்.

கே. பிரிவு 61 உபவிதி (பி)ன்படி அறிவிக்கை அனுப்பும் முறை

எல். விதிகளின் மூலம் வரையறுக்கப்படவுள்ள யாதொரு விஷயம் அல்லது பரிந்துரைக்கப்படவுள்ள அல்லது பரிந்துரைக்கப் படலாம் என்று எதிர்பார்க்கப்படும பிற விஷயங்கள்.

3. இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்படும் யாதொரு விதிமுறைகள் மற்றும் இப்பிரிவின் கீழ் உருவாக்கப்படும் ஒவ்வொரு விதி அவ்வாறு உருவாக்கப்பட்டவுடன் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் வைக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யும்போது, பாராளுமன்றமானது மொத்தம் முப்பது நாட்களை உடைய ஒரு கூட்டத் தொடரையோ அல்லது இரண்டு அல்லது மேற்பட்ட கூட்டத் தொடர்களையோ கொண்டிருக்கலாம். அப்படியிருந்தால் அடுத்து வரும் கூட்டத் தொடர் முடிவுக்கு வருமுன்னர் இது வைக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட கூட்டத் தொடர் அல்லது தொடர்ச்சியான கூட்டத் தொடர்களில் இரண்டு அவைகளும் அவ்விதி அல்லது ஒழுங்குமுறைகளில் மாற்றம் தேவை என்ற கருத்தில் ஒத்துப் போனாலோ அல்லது இரண்டு அவைகள் அவ்விதிகள் உருவாக்கப்பட தேவையில்லை என்று கருதினாலோ அவ்விதி அல்லது ஒழுங்குமுறை அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே அமுலுக்கு வரும் அல்லது அமுலுக்கு வராது எனினும் இத்தகைய மாற்றம் அல்லது வாபஸ் பெறப்படும் அவ்விதி அல்லது ஒழுங்கு முறைகளின் கீழ் ஏற்கனவே யாதொரு காரியங்களும் நிகழ்த்தப்பட்டிருந்தால் அவற்றின் செல்லும் தன்மைக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் இருக்கலாகாது.

விதிகளை உருவாக்கும் மாநில அரசின் அதிகாரங்கள்

63 1. அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதன் மூலம் மாநில அரசு இச்சட்டத்தின் நோக்கங்களை செயல்படுத்தும் பொருட்டு விதிகளை உருவாக்கலாம்.

2. குறிப்பாக, மேற்குறிப்பிட்ட அதிகாரங்களின் பொதுத் தன்மைக்கு குந்தகமன்னியில் இத்தகைய விதிகள் கீழ்க்கண்ட அனைத்து அல்லது யாதொரு விஷயம் குறித்து உருவாக்கப்படலாம் அவையாவன :-

எ. பிரிவு 23 உட்விதி (சி)ன்படி மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியம் மேற்கொள்ள வேண்டிய இதர பணிகள்.

பி. பிரிவு 24 உட்பிரிவு (1)ன்படி முன்தகவல் தர வேண்டிய படிவம்.

சி. பிரிவு 33ன்படி தயாரிக்கப்பட வேண்டிய ஆண்டறிக்கையும் படிவமும், நிதியாண்டில் அது தயாரிக்கப்பட வேண்டிய காலமும்.

டி. பிரிவு 34ன்படி மாநில பல்லுயிர்ப் பெருக்க வாரியத்தின் கணக்குகளை பராமரிப்பதும் மற்றும் தணிக்கை செய்வதற்கான முறைகளும் அதன் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் பிரதியுடன் அதன் பேரிலான ஆணையாளர் அறிக்கையை இணைத்து சமர்ப்பிக்க வேண்டிய கடைசிநாளும்.

இ. பிரிவு 37ன் படி தேசிய பாரம்பரிய இடங்களில் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு.

எப். பிரிவு 44 உட்பிரிவு (1)ன் படி உள்ளூர் பல்லுயிர்ப் பெருக்க நிதியத்தை நிர்வகிப்பதும் பாதுகாப்பும் மற்றும் நிதியத்தின் வளம் பயன்படுத்தப்பட வேண்டிய நோக்கங்கள்.

ஜி. பிரிவு 45ன்படி ஒவ்வொரு நிதியாண்டும் தயாரித்தளிக்கப்பட வேண்டிய ஆண்டறிக்கை படிவமும் அது தயாரிக்கப்பட வேண்டிய காலமும்.

எச். பிரிவு 46ன் படி உள்ளூர் பல்லுயிர்ப் பெருக்க நிதியத்தின் கணக்குகளை பராமரிப்பது மற்றும் தணிக்கை செய்து குறித்த வழிமுறைகள் மற்றும் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் பிரதியுடன்

அதன் பேரிலான தணிக்கையாளரின் அறிக்கையை இணைத்து அனுப்ப வேண்டிய கடைசி நாளும்.

ஐ. இனிமேல் குறித்துரைக்கப்படவேண்டிய, குறித்துரைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் யாதொரு பிற விஷயங்களும்.

3. இப்பிரிவின் கீழ் மாநில அரசால் உருவாக்கப்படும் ஒவ்வொரு விதியும் அவ்வாறு உருவாக்கப்பட்ட உடன் மாநில சட்டமன்றத்தின் ஒவ்வொரு அவையின், எங்கெல்லாம் சட்டமன்றம் இரு அவைகளை கொண்டிருக்கின்றதோ மற்றும் எங்கெல்லாம் அது ஒரே அவையை பெற்றிருக்கிறதோ அவ்வவைகள் முன்பும் வைக்கப்பட வேண்டும்.

இடர்களையும் அதிகாரம்

64. தேசிய பல்லுயிர்ப் பெருக்க ஆணையம், மத்திய அரசின் முன் அனுமதியுடன், அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதன் மூலம், இச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு விதிகளை உருவாக்கலாம்.

இடர்களையும் அதிகாரம்

65. இச்சட்டத்தின் அமலாக்குவதில் எதேனும் இடர் ஏற்படுமிடங்களில், மத்திய அரசு, உத்தரவின் மூலம், இச்சட்ட விதிகளுக்கு முரணாக இல்லாதவாறு அவ்விடரினை நீக்கலாம்.

இருப்பினும் இச்சட்டம் அமலுக்கு வந்து இரண்டு வருடம் முடிந்தபின் இத்தகைய உத்தரவுகள் எதனையும் இடக்கூடாது.

2. இப்பிரிவின் பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவும், அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட உடன் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் வைக்கப்பட வேண்டும்.

சுபாஷ் சி. ஜெயின்

இந்திய அரசு செயலாளர்.

# பல்லுயிர்பெருக்க விதிகள் - 2004

பிரிவு - 2

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் அறிவிக்கை

புது தில்லி, ஏப்ரல் 15, 2004

G.S.R. 261 (E) - 2002, இந்திய பல்லுயிர் பெருக்கச் சட்டம், பிரிவு 62ன்படி தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய பதிலீட்டகற்றிடு (ஊதியம், படி மற்றும் ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிகாலத்தின் நிபந்தனைகள்) விதி, 2003, மத்திய அரசு பின்வரும் விதிகள் உருவாக்கப் பெற்றுள்ளன.

1. குறுந்தலைப்பும் தொடக்கமும் பொருள் வரையறைகள்

   1. இந்த விதியானது, 2004ஆம் ஆண்டு பல்லுயிர் பெருக்க விதிகள் என வழங்கப்படும்.

   2. இது, ஏப்ரல் 15, 2004ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. வரையறைகள்

இந்த விதிகளில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி

ஏ. “சட்டம்” என்றால் பல்லுயிர் பெருக்கச் சட்டம் 2002 (18/2003);

பி. “ஆணையகம்” என்றால் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையகம் பிரிவு 8, உட்-பிரிவு (1) கீழ் நிறுவப்பெற்றது.

சி. “பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழு என்பது பிரிவு 41 உப பிரிவு 1இன் கீழ் ஊராட்சி அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்ட பல்லுயிர் பெருக்க வேளாண்மை குழு ஆகும்.

டி. ஆணையத்தலைவர் என்றால் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தலைவர் மாநில அளவில் மாநில பல்லுயிர் பெருக்க வாரிய தலைவர் என்று பொருள்படும்.

இ. “கட்டணம்” என்பது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு கட்டணம் என்று பொருள்.

எஃப். “விண்ணப்பம்” என்பது இந்த விதியுடன் இணைக்கப்பட்டு உள்ள விண்ணப்ப படிவம் ஆகும்.

ஜி. “உறுப்பினர்” என்பது தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தின் உறுப்பினர் அல்லது மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்தின் உறுப்பினர் என்று பொருள்.

ஹெச். “பிரிவு” என்பது இச்சட்டத்தின் பிரிவு என்று பொருள்.

ஐ. “செயலாளர்” என்பது ஆணையத்தின் முழுநேர செயலாளர் என்று பொருள்.

ஜே. இவ்விதி அல்லது சட்டத்தில் கொடுக்கப்படாத சில வார்த்தைகளின் வெளிபாடுகள் தேசிய பல்லுயிர் பெருக்கச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும்.

3. தெரிவு முறை மற்றும் ஆணைய தலைவர் நியமனம்

   (1) ஆணையத்தின் தலைவர் மத்திய அரசால் நியமிக்கப்படுவார்

   (2) இச்சட்டத்தின் உப பிரிவு 1இன் கீழ் ஒவ்வொரு முறையும் ஆணையத்தின் தலைவரை வேற்று பணியிலிருந்தோ அல்லது மத்திய அரசில் இல்லாத ஒருவரையோ தெரிவு செய்யும்.

ஒருவேளை மாற்று பணியில் இருப்பவரை நியமித்தால், அவர் இந்திய அரசாங்கத்தின் கூடுதல் செயலருக்கு உரிய தகுதி உள்ளவராக இருக்க வேண்டும்.

4. ஆணையத் தலைவரின் அலுவலக வரையறைக் காலம்

(1) ஆணையத்தினுடைய தலைவராக மூன்று வருடம் பதவி வகிக்கலாம் மேலும் மறு நியமனத்துக்கு தகுதி பெறலாம்.

(2) இருப்பினும், எந்த ஒரு ஆணையத்தலைவரும் 65 வயதிற்கு பிறகு அல்லது பதவி காலத்தின் போதே 65 வயது முடிந்திருந்தால் பதவி வகிக்க இயலாது.

(3) தலைவர் வேலையிலிருந்து விலக வேண்டுமானால் மத்திய அரசுக்கு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்பே எழுத்து வடிவத்தில் அறிவிக்க வேண்டும்.

(5) ஆணையத் தலைவரின் சம்பளம் (ஊதியம்) மற்றும் படி

(1) ஆணையத் தலைவரின் நிர்ணயிக்கப்பட்ட மாத ஊதியம் ரூ. 26,000 ஆகும். ஒருவேளை, பணிகாலத்திலிருந்து ஓய்வு பெற்றவராக இருந்தால், அவருக்கு பொருந்த கூடிய ஊதியத்தை மத்திய அரசின் ஆணைப்படி நிர்ணயிக்கப்படும்.

(2) ஆணையத் தலைவருக்கு, படி, விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி, வீடு மற்றும் இதர சலுகைகள் குறித்து மத்திய அரசால் அவ்வப்போது முடிவெடுக்கப்படும்.

(6) அலுவல் முறை சாரா உறுப்பினரின் அலுவலக வரையறை காலம் மற்றும் படி

(1) ஆணையத்தின் ஒவ்வொரு அலுவல் முறை சாரா உறுப்பினரின் பதவிகாலம் அரசு ஆணையால் நியமனம் வெளியிடபட்ட தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள்ளாகும்.

(2) ஆணையக்கூட்டம் அல்லது குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு அலுவல் முறை சாரா உறுப்பினர்களுக்கு அமர்வுபடி, தினப்படி, போக்குவரத்து செலவு மற்றும் இதர படிகள் பெற மத்திய அரசு ஆணையகூட்டம் அல்லது குழுக் கூட்டத்திற்கு கலந்துகொள்ளும் அலுவல் முறை சாரா உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் படிகளுக்கு இணையான படிகள் இவர்களுக்கும் பொருந்தும்.

7. அலுவல் முறைசாரா உறுப்பினர் பதவிக்கான காலியிடங்களை நிரப்புதல்

(1) ஆணையத்தினுடைய அலுவல் முறை சாரா உறுப்பினர், மத்திய அரசு முகவரிக்கு கைப்பட எழுதப்பட்ட எழுத்தின் மூலம் எந்த நேரத்திலும் தனது பதவியை ராஜினாமா செய்யலாம் மற்றும் அந்த பதவியிடம் காலியாக இருக்கும்.

(2) ஆணையத்தின் அலுவல் முறைசாரா உறுப்பினர்க்கான தற்காலிக காலியிடம் புது விண்ணப்பத்தின் மூலம் நிரப்பப்படலாம் மற்றும் புது விண்ணப்பத்தின் மூலம் நியமிக்கப்படுவர் யார் ஒருவர் இடத்திற்கு நியமிக்கப்பட்டாரோ அவருக்குள்ள விதிமுறைகளின்படி அலுவல்களை கவனிப்பார்.

8 . ஆணையத்தின் உறுப்பினர்களை பணிநீக்கம் செய்தல்

பிரிவு 11இல் குறிப்பிடபட்டுள்ளபடி ஆணையத்தில் உள்ள எந்த ஒரு உறுப்பினரையும் அலுவலக வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டுமானால் அந்த உறுப்பினரை மத்திய அரசு செயலர் பதவிக்கு குறைவில்லாத அதிகாரியால் விசாரிக்கப்பட்டு சரியான காரணங்கள் இருந்தால் ஒழிய அலுவலக வேலையில் இருந்து நீக்க முடியாது.

9 . ஆணையத்தின் செயலர்

(1) ஆணையம் ஒரு செயலரை நியமிக்கலாம்.

(2) செயலர் நியமனத்திற்கான விதிகவீளையும் நிபந்தனைகளையும் ஒழுங்குமுறை விதிப்படி ஆணையம் தீர்மானிக்கும்.

(3) ஆணைய கூட்டத்தை சந்தர்ப்பத்திற்கேற்றபடி ஆணைகளின் பதிவுருக்களை பராமரித்தல் மற்றும் ஆணையத்தால் கொடுக்கப்படும் வேலைகள் அனைத்திற்கும் நியமிக்கப்பட்ட செயலர் பொறுப்பு ஏற்க வேண்டும்.

10 . அதிகார குழுவினுடைய கூட்டம்

(1) ஆணைய குழு ஒரு வருடத்திற்கு நான்கு முறை அதாவது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தலைமை அலுவலகத்திலோ அல்லது ஆணைய தலைவரால் முடிவெடுக்கப்படும் எந்த ஒரு இடத்திலோ கூட வேண்டும்.

(2) ஆணைய தலைவர், ஐந்துக்கு குறையாத அதிகார குழு உறுப்பினர்களின் எழுத்துபூர்வ வேண்டுதலுக்கு இணங்க அல்லது மத்திய அரசின் உத்திரவின் பேரில் ஆணைய சிறப்பு கூட்டம் நடத்த அழைக்கலாம்.

(3) உறுப்பினர்களுக்கு வழக்கமான கூட்டமாக இருந்தால் பதினைந்து நாட்களுக்கு முன்பும் சிறப்பு கூட்டமாக இருந்தால் மூன்ற நாட்களுக்கு முன்பும் என்ன காரணத்திற்கு, எந்த இடத்தில், எத்தனை மணியளவில் என்று தெரிய படுத்த வேண்டும்.

(4) ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஆணைய தலைவரே தலைமை வகிப்பார் மற்றும் ஆணையத் தலைவர் இல்லாதபோது கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பனிர்களில் ஒருவரை தலைமை வகிக்க தேர்ந்தெடுக்கலாம்.

(5) ஆணையக் கூட்டத்தில் முடிவுகள் வாக்கெடுப்பு முறையில் எடுக்கப்பட வேண்டும். ஒருவேளை தேர்வு முறையில் இறுக்கம் ஏற்பட்டால் ஆணையத் தலைவரோ அல்லது கூட்டத்தை தலைமை ஏற்று நடத்துபவரோ அறுதி வாக்களித்து முடிவெடுக்கலாம்.

(6) ஒவ்வொரு உறுப்பினருக்கு ஒரு வாக்கு உண்டு.

(7) ஆணையத்தின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஐந்திற்கு குறையாத உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

(8) எந்த ஒரு உறுப்பினரும் பத்து நாட்கள் முன்பாக முன் அறிவிப்பு செய்யாமல் எந்த ஒரு காரணத்திற்காகவும் கூட்டத்தை கூட்ட இயலாது, அல்லாமல், ஆணையத் தலைவரின்

விருப்ப உரிமையின்படி அந்த உறுப்பினருக்கு அனுமதி அளிக்கலாம்.

(9) ஆணையத்தின் செயலர், சூழ்நிலைக்கேற்ப ஆணைய கூட்டம் பற்றிய அறிவிப்பை செய்தியாளர் மூலமாக அல்லது உறுப்பினர்களுடைய தெரிந்த முகவரிக்கு விரைவு அஞ்சல் மூலமாக அனுப்பலாம்.

11. ஆணையத்தால் வல்லுனர்குழு நியமித்தல் மற்றும் அதனுடைய உரிமைகள்

(1) ஆணையத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களையோ அல்லது முழுவதும் வேறு நபர்களையோ அல்லது ஒருசில ஆணைய உறுப்பினர்களையும் வேறு சில நபர்களையும் கொண்டு தேவையான நோக்கத்திற்காக ஆணையம் பல குழுக்களை அமைக்கும்.

(2) ஆணைய உறுப்பினர்கள் அல்லாத குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்களுக்கு, பொருத்தமென கருதலாகும் பக்ஷசத்தில் ஆணைய கூட்டத்தில் கலந்து கொண்டதற்கான ஊதியம் மற்றும் படி கொடுக்கப்படும்.

12. ஆணையத்தினுடைய பொது பணிகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பணிகளை ஆணையம் செயல்படுத்தும்; அதாவது :-

(1) பிரிவுகள் 3, 4 மற்றும் 6இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள செயல்களை முறைபடுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை முன்னிடுதல்.

(2) பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு, உயிரியல் வாதத்தை நீடித்தல் மற்றும் உயிரியல் ஆதாரம் மற்றும் அறிவாண்மையை பயன்படுத்துவதில் வரும் பயன்கள் சமத்துவ முறையில் பகிர்ந்து கொள்ளுதல் பற்றிய யாதொரு விஷயத்தையும் மத்திய அரசுக்க அறிவுறுத்தல் வேண்டும்.

(3) மாநில பல்லுயிர்பெருக்க வாரியத்தினுடைய செயல்பாடுகளுக்கு ஒத்திசைவித்தல்.

(4) மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கு தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டலுக்கு ஏற்பாடு செய்தல்.

(5) கல்வித்திட்டத்தை ஏற்படுத்தி (Commission studies) ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு உதவி அளிக்க வேண்டும்.

(6) குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது மூன்றாண்டுகளுக்கு மிகாமல் ஆணையத்திற்கு தொழில்நுட்ப உதவிகள் செய்ய மற்றும் கொடுக்கப்பட்ட வேலைகளை திறமையாக செய்யவும் கலந்தாய்வுரைஞரை வைத்துக்கொள்ளலாம்.

ஆனால் மேலும், தேவையானால் தகுந்த மூன்று வருடங்களுக்கு மேலான யாதொரு கலந்தாய்வு அறிஞரை வைத்துகொள்ள ஆணையம் மத்திய அரசிடம் முன்கூட்டி அனமதி பெற வேண்டும்.

(7) பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு, உயிரியியல் வளத்தை நிலையான முறையில் பயன்படுத்துதல், உயிரியியல் ஆதாரம் மற்றும் அறிவாண்மையை பயன்படுத்துவதில் வரும் பயன்களை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவை பற்றிய தகவல்களை சேகரித்து, தொகுத்து தொழிற்நுட்ப புள்ளி விவரங்களாக, சிறு புத்தகமாக, தொகுப்பு அல்லது வழிகாட்டியாக பிரசுரித்து வெளியிடலாம்.

(8) பல்லுயிர்பெருக்க பாதுகாப்பு, உயிரியியல் வளத்தை நிலையான முறையில் பயன்படுத்துதல், உயிரியியல் ஆதாரம் மற்றும் அறிவை பயன்படுத்துவதில் வரும் பயன்கள் சமத்துவ முறையில் பகிர்ந்துகொள்ளுதல் முதலிய விஷயங்களை பற்றி பெரிய அளவில் வெகுஜன விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யலாம்.

(9) பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு மற்றும் உயிரியியல் வளத்தை நிலையான முறையில் பயன்படுத்துதல் குறித்து பங்கேற்றிருக்கும் அல்லது பங்கேற்கவிருக்கும் தனிநபருக்கு பயிற்சியளிக்க திட்டம் தீட்டலாம்.

(10) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையமானது ஒரு ஆண்டுக்கான நிதி அறிக்கையை, மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்பவும், ஆணையத்துடைய நிதி தொடர்பான ஆவணங்களையும் தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். இருப்பினும் மத்திய அரசு அனுமதி கொடுத்த பிறகே நிதி ஒதுக்கீடு செய்யும்.

(11) ஆணையம், வேலைகளை திறமையாக முடிக்க புதிய பணியிடம் உருவாக்க சிபாரிசு செய்தல், இருப்பினும் நிரந்தர / தற்காலிக அல்லது எந்த பணியிடமும் மத்திய அரசின் முன் அனுமதி பெறாமல் உருவாக்க முடியாது.

(12) ஆணையத்திற்கு அலுவலர் மற்றும் பணியாளர் தேர்ந்தெடுக்கும் முறையை உறுதிசெய்தல்.

(13) உயிரியல் ஆதாரத்திற்கான தகவல்கள், நிலையான பயன், அறிவாண்மை, விவரகுறிப்புகள் மற்றும் ஆவணங்களை தகுந்த முறையில் மின்னியல் விவரகுறிப்புகள், மற்றும் பல்லுயிர் பெருக்க பதிவேடு மூலமாக பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.

(14) இச்சட்டத்தை திறமையாக செயல்படுத்த எழுத்துமூலமாக மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கும் மற்றும் பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழுக்கும் கட்டளையிடுதல்.

(15) ஆணையத்தினுடைய வேலைகள் மற்றும் சட்டத்தின் செயல்பாடுப் பற்றி மத்திய அரசுக்கு அறிக்கையளித்தல்.

(16) அவ்வப்போது பிரிவு 6இன் உப பிரிவு 1இன் கீழ் சமபங்கீடு மூலம் வசூலாகும் நிதி அல்லது பிரிவு 19 உபபிரிவு (2)ன் கீழ் உயிரியியல் ஆதார அடிப்படையில் கிடைக்கும் உரிமத்தை மாற்ற சிபாரிசு செய்தல்.

(17) குறிப்பிட்ட நோக்கத்திற்காக மாநில பல்லுயிர் பெருக்க வாரியம் மற்றும் பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழுக்களுக்கு நிதி மற்றும் நிதி உதவி அளித்தல்.

(18) சட்டச் செயலாக்கத்தின் பொருட்டு யாதொரு பகுதிக்கும் நேரடி ஆய்வை மேற்கொள்ளுதல்.

(19) சட்டத்திற்கு புறம்பாக இந்தியாவின் உயிரியியல் ஆதாரம் மற்றும் அதை பற்றிய அறிவுணர் உரிமையை (IPR) வெளிநாடுகள் இந்தியாவிலிருந்து பெற்றால் அதை தடுக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கவும் சட்ட வல்லுனரை நியமிக்கலாம்.

(20) அவ்வப்போது மத்திய அரசால் இடப்படும் கட்டளை அல்லது கொடுக்கப்பட்ட மற்ற வேலைகளை செய்தல்.

13. ஆணைய தலைவரின் அதிகாரம் மற்றும் பணிகளாவன

(1) ஆணையத்தினுடைய அன்றாட செயல்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஆணைய தலைவர் கட்டுபாட்டில்கொள்ள வேண்டும்.

(2) பிரிவு 10ன்படி வழிமுறைகளுக்கு உட்பட்டு, ஆணைய தலைவர், ஆணையத்தினுடைய அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளை கண்காணிக்க அதிகாரம் உண்டு. மேலும், ஆணைய செயல்கள், நடைபெற மற்றும் மேலாண்மைக்காக ஆணைய தலைவர் தேவையான கட்டளை பிறப்பிக்கலாம்.

(3) ஆணையத்தின் மந்தண தாள்கள் மற்றும் பதிவுருக்களை பத்திரமாக பாதுகாப்பதும் ஆணைய தலைவரின் பொறுப்பாகும்.

(4) அனைத்து ஆணைகள் மற்றும் நெறிமுறை கட்டளை ஆணைகள் ஆணைய தலைவரின் கையொப்பத்துடன் அல்லது ஆணைய தலைவரின் அதிகாரம் பெற்றவரின் கையொப்பத்துடன்தான் வெளியிட அனுப்ப வேண்டும்.

(5) ஆணைய தலைவர் தானாகவோ அல்லது ஆணையத்தின் அதிகாரம் பெற்ற அதிகாரியோதான் ஏற்பளிக்கப்பட்ட வரவு - செலவு திட்டத்திற்கேற்ப ஒப்பளித்து வகை செய்ய வேண்டும்.

(6) அனைத்து அலுவலக மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடுகளுக்கும் ஒப்புதல் வழங்க ஆணைய தலைவருக்கு அதிகாரம் உண்டு.

(7) ஆணைய தலைவர் அனைத்து கூட்டங்களையும் தலைமை தாங்கி நடத்த வேண்டும் மற்றும் கூட்டத்தில் ஆணையத்தால் எடுக்கப்படும் முடிவுகள் சரியான முறையில் செயல்படுத்தபடுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

(8) ஆணையம் அல்லது மத்திய அரசால் அவ்வப்போது கொடுக்கப்படும் மற்ற அதிகாரம் மற்றும் பணிகளை ஆணைய தலைவர் நிறைவேற்ற வேண்டும்.

14. உயிரியியல் ஆதாரம் மற்றும் சம்பந்தப்பட்ட, பாரம்பரிய அறிவாண்மைக்கு நுழைவுரிமை பெறுவதற்கான நடைமுறை

(1) யாதொரு நபரும் ஆராய்ச்சிக்காக அல்லது வாணிப பயன்பாட்டிற்காக உயிரியியல் ஆதாரம் மற்றும் சம்பந்தப்பட்ட அறிவாண்மை ஆகியவற்றிற்கு நுழையுரிமை, ஆணையத்திடமிருந்து ஒப்புதல் விண்ணப்ப படிவம் 1ன் மூலம் பெறலாம்.

(2) உப-பிரிவு (1)ன் கீழ் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ரூபாய் பத்தாயிரத்திற்கான, தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய சார்பின் ஆதரவாக எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை அல்லது காசோலை இருக்க வேண்டும்.

(3) விண்ணப்பம் பெற்றவுடன் ஆணையம் உள்ளாட்சி அமைப்புகளுடன் கலந்து ஆலோசித்து, தேவையான செய்திகளை விண்ணப்பத்தாரரிடம் மற்றும் மற்ற ஆதாரம் மூலம் சேகரித்து, அது தேவை என கருதலாகும் பட்ஷத்தில், விண்ணப்பத்தை பெற்ற நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள் முடிவு செய்யும்.

(4) விண்ணப்பம் திருப்திகரமான தகுதி பெற்றிருந்து, விதிக்கு பொருத்தமென கருதும் பட்சத்தில், விதிமுறைகளுக்கும் வரைமுறைகளுக்கும் உட்பட்டு உயிரியியல் ஆதாரம் மற்றும் சம்பந்தப்பட்ட அறிவாண்மை ஆகியவற்றிற்கு விண்ணப்பத்தாரருக்கு ஆணையம் நுழையுரிமை அளிக்கும்.

(5) விண்ணப்பதாரரும் மற்றும் ஆணையத்தின் அதிகாரம் பெற்ற அதிகாரியும் எழுத்து வடிவிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு நுழையுரிமை வழங்கும்.

(6) உப–பிரிவு (5)ல் கூறியுள்ளபடி ஒப்பந்த உரை ஆணையத்தால் வகுத்தமைக்கப்பட்டுள்ள மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளை உட்படுத்தும், அதாவது :

(i) நுழைவுரிமை பெறுவதற்கான விண்ணப்பத்தின் நோக்கம், மற்றும் பொதுநோக்கம்.

(ii) உயிரின ஆதாரங்கள் மற்றும் பாரம்பரிய அறிவு சம்பந்தபட்ட அனைத்தையும் உள்ளடக்கிய கருத்து விவரம்.

(iii) பல்லுயிர் ஆதாரத்தின் பயன்கள் (ஆராய்ச்சி, அபிவிருத்தி, வணிகப் பயன் மற்றம் பல.)

(iv) வரைமுறையின்படி விண்ணப்பதாரர் அறிவுணர் (IPR) பெறுதல் / விரும்புதல்.

(v) பணம் மதிப்பீட்டின் அளவு மற்றும் இதர இடைநிகழ் பயன்கள், ஒருவேளை முக்கியமாக உயிரியியல் பொருட்களை ஆராய்ச்சி நோக்கத்திற்காக எடுத்து, பிறகு, வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தல் மற்றும், பிற்காலத்தில் பயன்களை மாற்றம் செய்யப்படலாம் என்னும் பட்சத்தில் புதிய ஒப்பந்தம் செய்துகொள்வது அவசியமாகும்.

(vi) ஆணையத்தின் அனுமதியில்லாமல் மூன்றாவது மனிதருக்கு மரபுசார்ந்த அறிவாண்மை மற்றும் உயிரியியல் ஆதாரம் நுழைவுரிமை மாற்ற தடை விதித்தல்.

(vii) உயிரியியல் ஆதாரத்தின் தரம் மற்றும் அளவு பற்றிய விவர குறிப்பேட்டுக்கு ஆணையத்தால் அமைக்கப்பட்ட வரம்பை கடைபிடித்து விண்ணப்பதாரர் நுழைவுரிமை மேற்கொள்ளலாம்.

(viii) பிரிவு 39ன்படி கண்டறியப்பட்ட உயிரியியல் பொருள்களின் செலுத்தப்பட்ட மாதிரிகளை வைப்பதற்கு பொறுப்புறுதி அளித்தல்.

(ix) வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியின் கருத்து படிவத்தை ஆணையத்திற்கு முறைப்படி பணிந்தனுப்புதல்.

(x) நாட்டின் அமுலாக்கப்பட்ட இதர கூட்டம் மற்றும் பல்லுயிர் பெருக்கச் சட்டம் மற்றும் விதிகளின் வழி வகை பொறுப்பேற்றல்.

(xi) உயிரியியல் ஆதார மற்றும் நிலையான பயன்பாட்டிற்கு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(xii) சேகரிப்பு முறைகளுடைய சூழல் விளைவை குறைக்க பொறுப்பேற்றல்.

(xiii) சட்ட வழிவகையானது ஒப்பந்தத்தின் காலம், ஒப்பந்தத்தை முடித்துகொள்ளும் அறிவிப்பு,

தனிப்பட்ட தன்னாண்மை பொறுப்பு செயலாக்க கூறு, ஒப்பந்தத்தை முடித்துகொள்ள எஞ்சியிருக்கும் சமபங்கீடு கூறுகளின் கூட்பாட்டை பரப்புவதற்கான வழிவகைகள், நிகழ்ச்சி வரம்பு பொறுப்புகள் (இயற்கை பேரிடர்), நடுவர் தீர்ப்பு, மற்ற மந்தணக் கூறுகள்.

7. நுழைவுரிமைக்கான வரையறைகளில் குறிப்பிட்ட நடவடிக்கைகள் உயிரியியல் ஆதாரங்களை பேணி பாதுகாத்தலுக்காக வரையறைகளில் குறிப்பிட்ட நடவடிக்கையின் பேரில் நுழைவுரிமைக்கான மானியம் அளித்தல்.

8. வேண்டுகோளை தள்ளுபடி செய்ததற்கான காரணங்களை ஆணையம் எழுத்து பூர்வமாக தெரிவித்தல்.

9. விண்ணப்பத்தாரருக்கு கருத்துகளை சொல்ல நியாயமாக வாய்ப்பளிக்காமல் யாதொரு விண்ணப்பமும் தள்ளுபடி செய்யப்படலாகாது.

10. ஆணையம் ஒப்புதல் கொடுப்பதை அச்சு மூலமாகவோ அல்லது மின்னியியல் மூலமாக வெளியிடும், மற்றும் காலமுறைதோறும் மேற்பார்வையிட்டு வரையறைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கப்படும்.

15. ஒப்பந்தத்தை தள்ளுபடி செய்தல்

(1) ஆணையம், விதி 15ன் கீழ் குற்றமுறை அடிப்படையில் அல்லது ................ நுழைவுரிமைக்கு அளித்த மான்யத்தை திரும்ப பெறுதல் மற்றும் கீழ்காணும் வரையறைகள்படி எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தை தள்ளுபடி செய்தல் / திரும்ப பெறுதல், அதாவது :

(i) நியாயமான நம்பிக்கையுடன் நுழையுரிமை பெற்ற நபர் சட்டத்தின் யாதொரு வழிவகையின்படி அல்லது நுழையுரிமை வழங்கல் பற்றிய வரையறைகளை மீறல்

(ii) நுழையுரிமை பெற்ற நபர் ஒப்பந்த விதிமுறைகளுக்கு இணங்கி செயலாற்றாமை.

(iii) நுழையுரிமைக்கு கொடுக்கப்பட்ட யாதொரு வரையறைகளின்படி இணங்கி செயலாற்றாமை.

(iv) பொதுமக்கள் நலனின் மேலுரிமைப்பாட்டில் பணிய மறுத்தல் காரணமாக அல்லது சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிரியியல் ஆதாரத்தை பாதுகாக்க தவறுதல்.

2. ஆணையம் ஒப்பந்தத்தை தள்ளுபடி செய்த உத்தரவின் நகலை மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கும் மற்றும் பல்லுயிர்பெருக்க மேலாண்மை குழுக்கும் அனுப்பி நுழையுரிமை தள்ளுபடியான பகுதியில் நுழையுரிமையை தடுத்து, யாதொரு இழப்பு ஏற்பட்டிருப்பின் அவ்விழப்பை திரும்பெற வேண்டும்.

16. உயிரியியல் ஆதாரங்களின் நுழையுரிமைக்கு சம்பந்தப்பட்ட செயல்களுக்கான வரையறை

1, ஆணையம் தேவைப்பட்டால் உயிரியியல் ஆதாரங்களுக்காக நுழைவுரிமை வேண்டுதலை தடை செய்ய அல்லது தகுந்த வரையறை எடுக்கும், அதாவது

(i) அழியும் தருவாயில் உள்ள உயிரினங்களை நுழைவுரிமை கோருதல்

(ii) அரிய மற்றும் அதே சூழலில் உள்ள உயிரினங்களுக்கான நுழைவுரிமை கோருதல்

(iii) உள்ளூர் மக்களுக்கு எதிரான விளைவால் ஏற்படும் முடிவுக்கு நுழைவுரிமை கோருதல்.

(iv) நுழைவுரிமை கோருதல், சுற்றுச்சூழலுக்கு எதிரான விளைவுக்கு கட்டுபடுத்த மற்றும் மட்டுபடுத்த முடியாததாக இருக்கலாம்.

(v) சூழல் பணிகளை பாதிக்கச் செய்கிற அல்லது மரபுவழி பண்பின் அழிவிற்கு உள்ளாக்குதல் ஆகியவைகளில் நுழைவுரிமை கோருதல்.

(vi) இந்தியாவில் உள்ளிழுக்கப்பட்ட அயல்நாடுகளின் ஒப்பந்தம் மற்றும் நாட்டின் சிறப்புக்கு எதிரான நோக்கத்துடன் ஆதாரத்தை பயன்படுத்தல்.

17. ஆராய்ச்சி கட்டுரைகளை மாற்றும் செய்யும் ஒப்புதலுக்கான நடைமுறை

(1) யாதொருவராக இருந்தாலும், இந்தியாவிலிருந்து பெறப்பட்ட உயிரியல் ஆதார ஆராய்ச்சி முடிவுகளை நாணயத்தின்பேரில் அயல்நாடுகள் நிறுமம் மற்றும் இந்தியாவில் வசிக்காத இந்தியர் ஆகியோருக்கு மாற்றம் செய்ய விண்ணப்பம் இரண்டை பயன்படுத்தி ஆணையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) உப பிரிவு (1)ன் கீழ் ஆணையத்தின் பேரில் ரூபாய் ஐந்தாயிரத்திற்கான காசோலை அல்லது வங்கிப்பண கொடுப்பாணை எடுக்கப்பட்டு ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) உப-பிரிவு (1)ன் கீழ், விண்ணப்பம் வந்து சேர்ந்த தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் ஆணையத்தால் முடிவெடுக்கப்படும்.

(4) விண்ணப்பதாரரால் கொடுக்கப்பட்ட அனைத்தும் திருப்திகரமாக இருந்தால், ஆராய்ச்சிகளின் முடிவுகளை மாற்றம் செய்யலாம் என்று கருதும் பட்சத்தில் ஆணையம் விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்ட ஒப்புதல் அளிக்கும்.

(5) மாற்றம் செய்வதற்கான, ஆணையத்தின் அதிகாரம் பெற்ற அதிகாரியின் கையொப்பம் மற்றும் விண்ணப்பதாரரின் கையொப்பமும் எழுத்து பூர்வத்தில் இருக்க வேண்டும். இந்த ஒப்பந்தம்பற்றி ஆணையம் இறுதி முடிவெடுக்கும்.

(6) விண்ணப்பம் யாதொரு காரணங்களால் ஆணையம் எழுத்துபூர்வமாக தள்ளுபடி செய்திருந்தால், கோரிக்கையின்பேரில் அந்த விண்ணப்ப;த்தை எடுத்துகொள்ளபடமாட்டாது அல்லாமல் தள்ளுபடி செய்யும் பட்ஷத்தில் விண்ணப்பதாரர் தனது கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

18. அறிவுணர் உரிமை பாதுகாப்பு விண்ணப்பத்திற்கு முன் ஒப்புதல் பெறுவதற்கான நடைமுறை

(1) இந்தியாவிலிருந்து பெறப்பட்ட உயிரியியல் ஆதாரம் மற்றும் அறிவு சம்பந்த ஆராய்ச்சிக்கு தனியுரிமை சான்றிதழ் அல்லது யாதொரு அறிவுணர் (Intellectuel Property) உரிமைக்கு யாதொருவர் விரும்பினாலும் விண்ணப்ப படிவம் 111ஐ பயன்படுத்த வேண்டும்.

(2) உப-பிரிவு 1ன் கீழ் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ரூபாய் ஐந்நூறு செலுத்த வேண்டும்.

(3) ஆணையம், விண்ணப்ப தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் கூடுதலாக சேர்த்த விவரங்களின்படி விண்ணப்பத்தகுதியை தெரிவிக்கும்.

(4) விண்ணப்பதாரர் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்திருந்தால், ஆணையம் தனியுரிமை சான்றிதழ் அல்லது அறிவுணர் உரிமைக்கு பொருந்துமென கருதும் பட்சத்தில் மேற்கூறப்பட்ட விதிமுறைகள் மற்றும் வரையறைகளுடன் ஒப்புதல் அளிக்கும்.

(5) ஆணையத்தின் அதிகாரம் பெற்ற அதிகாரியும் விண்ணப்பத்தாரரும் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தின் பேரில் முடிவெடுக்கும்.

(6) ஆணையம் விண்ணப்பத்தை காரணங்கள் குறிப்பிட்டு தள்ளுபடி செய்யலாம். தள்ளுபடி செய்வதற்கு முன்பு விண்ணப்பத்தாரர் விளக்கம் கூற வாய்ப்பளிக்க வேண்டும்.

19. பிரிவு 20ன் உப-பிரிவு (2)ன் கீழ் மூன்றாவது நபருக்கு மாற்றமவதற்கான நடைமுறை

1. உயிரியியல் ஆதாரம் மற்றும் அது சார்ந்த அறிவாண்மைக்காக நுழைவுரிமை ஒப்புதல் பெற்ற நபர் உயிரியியல் ஆதார நுழைவுரிமையை அல்லது அறிவாண்மையை யாதொரு நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ மாற்ற ஆணையத்திற்கு படிவம் நான்கின் (Form IV) மூலம் விண்ணப்பிக்கலாம்.

2. ஒவ்வொரு விண்ணப்பதுடன் உப-பிரிவு (1)ன் கீழ் ரூபாய் பத்தாயிரத்திற்கான ஆணையத்தின் பேரில் எடுக்கப்பட்ட வங்கிப்பண கொடுப்பாணை அல்லது காசோலையை இணைத்து அனுப்ப வேண்டும்.

(3) ஆணையம், விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து முடிந்த வரையில் ஆறுமாத காலத்திற்குள் இதர விபரங்களை சேகரித்த பிறகு விண்ணபத்தின்பேரில் முடிவெடுக்கும்.

(4) விண்ணப்பத்தாரரால் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் திருப்திகரமாக இருந்து மூன்றாம் நபருக்கு மாற்றம் செய்யலாம் என்று கருதும் பட்சத்தில் ஆணையம் விதிமுறைகள் மற்றும் வரைமுறைகளுக்கு உட்பட்ட ஒப்புதல் அளிக்கும்.

(5) உப-பிரிவு (4)ன் கீழ் ஆணையத்தின் அதிகாரம் பெற்ற அதிகாரியின் கையொப்பமும், விண்ணப்பத்தாரரின் கையொப்பமும் இட்ட எழுத்து பூர்வமான ஒப்பந்தத்தை அளிக்கலாம்.

(6) விண்ணப்பம் யாதொரு காரணங்களால் ஆணையம் எழுத்து பூர்வமாக தள்ளுபடி செய்திருந்தால், கோரிக்கையின்பேரில் அவ்விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. அல்லாமல், தள்ளுபடி செய்யும் பட்சத்தில் விண்ணப்பதாரர் தனது கருத்துகளை தெரிவிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

20. சமபங்கீடு பயனுக்கான அடிப்படை தத்துவம் (பிரிவு 21)

1. சமபங்கீடு முறை பற்றிய விளக்கங்களை அரசிதழின் அறிக்கையில் ஆணையம் வெளியிட வேண்டும்.

2. பணம், மற்றும் நிருமம்; கூட்டு முயற்சி தொழிற்நுட்ப மாற்றம்; பொருள் வளர்ச்சி; கல்வி மற்றும் விழிப்புணர்பு ஏற்படுத்தும் செயல்கள்; நிறுவன செயலாற்றல் திறன்; மற்றும் முதலீட்டு நிதிக்கான வழிமுறைகளை ஏற்படுத்திதர வேண்டும்.

3. பயனீட்டு முதலீட்டுக்கான விதிமுறையை ஒன்றன்பின் ஒன்றான நிகழ்ச்சியின் அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டும்.

4. தனிநபருக்கு நுழையுரிமை அளிக்கும்போது அல்லது ஆராய்ச்சி முடிவுகளை மாற்றம் செய்யும்போது அல்லது தனி உரிமை மற்றும் அறிவுணர் உரிமைக்காக விண்ணப்பிக்கும்போது அல்லது ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் அதுதொடர்புடைய அறிவாண்மை மூன்றாவது நபருக்கு மாற்றம் செய்யும்போதும், உயிரியியல் பொருள்கள் மற்றும் இது சார்ந்த அறிவாண்மையை பயன்படுத்துவதில் வரும் பயன்களை சமமாக பங்கிட்டுகொள்ள ஆணையம் விதிமுறைகளையும் வரையறைகளையும் உட்படுத்தலாம்.

5. ஒப்பந்தத்தில் பயன்களின் பங்கை மேற்படி அனுமதி வேண்டி பரஸ்பர ஒப்பந்தத்தின்பேரில் ஆணையத்திடம் விண்ணப்பம் செய்தால், ஆணையம் உள்ளாட்சிமன்றம் மற்றும் பயன்களில் உரிமை கொண்டாடுபவர்கள் ஆகியோரை ஆலோசித்தபிறகு நுழையுரிமைக்கு பயன் நீட்டிப்பு, நீடித்தத் தன்மையின் நோக்கம், செயல் விளைவு, மற்றும் எதிர்பார்த்த பலனின் அளவு, பல்லுயிர் பெருக்கத்தின் நிலையான பயன் மற்றும் பாதுகாப்பை உறுதிபடுத்தும் விதத்தில் ஆணையம் முடிவு செய்யலாம்.

6. ஒவ்வொரு செயலுக்கேற்ப, குறுகிய கால பயன், இடைப்பட்டகால பயன் மற்றும் நீண்ட கால பயனுக்கான பங்கீட்டின் மதிப்பீட்டிற்கான குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஆணையம் ஒப்பந்தபடுத்த வேண்டும.

7. பல்லுயிர்ப்பெருக்க பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டை பெறுவதற்கு இவ்வாணையம் தகுந்த வழிவகுக்க வேண்டும்.

8. குறிப்பிட்ட தனி நபரிடமிருந்தோ அல்லது தனிநபர்கள் கொண்ட குழுவிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ உயிரியியல் ஆதாரம் மற்றும் அது சார்ந்த அறிவாண்மையை பெற்றிருந்ததால் அதற்கான விதி தொகையை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நேரடியாக பெற ஆணையம் நடவடிக்கை எடுக்கலாம். மேற்குறிப்பிட்டவர்களை கண்டறிய முடியாத பட்சத்தில் பயனீட்டல் பணத்தை தேசிய பல்லுயிர் பெருக்க நிதியில் சேர்க்க வேண்டும்.

9. பயன் மதிப்பீட்டிலிருந்து ஐந்து சதவிகித தொகையை ஆணையத்தால் அல்லது வாரியத்தால், நிர்வாகம் மற்றும் சேவை கட்டணத்திற;க்காக ஒதுக்கி வைத்தல் வேண்டும்.

10. உப-பிரிவு (4)ன் கீழ் நிர்மானிக்கப்பட்ட பயன்பெருக்கத்தை ஆணையம் நிர்மாணிக்கப்பட்ட முறைபடி மேற்பார்வையிட வேண்டும்.

21. தேசியப் பல்லுயிர் பெருக்க நிதிக்கான விண்ணப்பம்

1. தேசிய பல்லுயிர் பெருக்க நிதி ஆணைய தலைவர் அல்லது இது சம்பந்தமாக ஆணையத்தால் அதிகாரம் பெற்றவரால் செயல்படுத்தபடும்.

2. தேசிய பல்லுயிர் பெருக்க நிதியானது, இரண்டு தனித்தனி கணக்குகள் வைத்திருக்க வேண்டும். ஒன்று மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதிக்காகவும் மற்றொன்று ஆணைய;த்தின் கட்டணம், உரிம கட்டணம், உரிமம் மற்றும் இதர ஆணையத்தின் ரசீதுகளுக்கான கணக்கு.

22. பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழு அமைத்தல்

1. ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் தத்தமது எல்லைக்குள் பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழுவினை அமைத்திட வேண்டும்.

2. பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழு உப-பிரிவு (1)ன் கீழ் அமைக்கப்பட்டு, அதற்கான ஒரு தலைவர் மற்றும் ஆறுக்கம் மேம்படாத உள்ளாட்சி அமைப்பால் குறிப்பிடப்பட்ட நபர்கள் அந்த நபர்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களும் 18%க்கு குறையாத ஆதிதிராவிட / பழங்குடியின நபர்களும் இருக்க வேண்டும்.

3. உள்ளாட்சிமன்ற தலைவரின் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட கூட்டத்தில் பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழு தலைவரை தேர்ந்தெடுப்பர். ஒரு வேளை தேர்வு முறையில் இறுக்கம் ஏற்பட்டால் உள்ளாட்சிமன்ற தலைவர் அறுதி வாக்கு அளிக்கலாம்.

4. பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழு தலைவரின் பதவிகாலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

5. உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் / சட்டமேலவை உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் குழு கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளலாம்.

6. பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழுவின் முக்கிய செயல்பாடானது உள்ளூர் மக்களிடம் கலந்துபேசி மக்களுடைய பல்லுயிர் பெருக்க பதிவேடு தயாரிப்பதே ஆகும். இந்த பதிவேடு உள்ளூர் உயிரியியல் ஆதாரம் அறிவாண்மை மருத்துவ பயன் அல்லது இதர பயன்கள் அல்லது பாரம்பரிய அறிவாண்மை ஆகிய விவரங்களை உள்ளடக்கியதாகும்.

7. பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழுவின் இதர செயல்பாடானது மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்தால் யாதொரு கருத்தை கேட்டுகொள்ளப்பட்டபடியும் அல்லது ஆணைய ஒப்புதலின் பேரில் உயிரியியல் ஆதாரங்களை பயன்படுத்தும் உள்ளூர் வைத்தியர்கள் மற்றும் வைத்திய முறைப்பற்றிய தகவல்களை பராமரிக்க வேண்டும்.

8. மின்னனு தகவல்முறை படிவத்துக்கு ஏற்ப ஆணையம் மக்களுடைய பல்லுயிர்பெருக்க பதிவேட்டுக்கான வடிவத்தை குறிப்பிட வேண்டும்.

9. மக்களினுடைய பல்லுயிர்பெருக்க பதிவேட்டை தயாரிக்க பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழுக்கு ஆணையம் மற்றும் மாநில பல்லுயிர் பெருக்க வாரியம் பின்பற்றதக்க வழிமுறைகள் மற்றும் தொழிற்நுட்ப உதவிகளை அளிக்கும்.

10. பல்லுயிர் பெருக்க மேலாண்மை குழு மக்களுடைய பல்லுயிர் பெருக்க பதிவேட்டை பராமரித்து செல்லதக்கதாகும்.

11. மேலும், உயிரியியல் ஆதார நழையுரிமை பற்றிய விவரம், பாரம்பரிய அறிவாண்மை, விதிக்கப்பட்ட நிதி சேகரிப்பு பற்றிய விவரம் மற்றும் பெறப்பட்ட பயனின் விவரம் மற்றும் பங்கீட்டு முறை ஆகியவைகளை உள்ளடக்கிய பதிவேடு ஆகியவற்றை இக்குழு பராமரிக்க வேண்டும்.

23. பிரிவு 50ன் கீழ் பிரச்சனைக்கு தீர்வுகாணும் மேல் முறையிடு

1. ஆணையத்தினிடையே அல்லது மாநில பல்லுயிர் பெருக்க வாரியம் அல்லது ஒரு வாரியத்திற்கும் மற்றொரு வாரியத்திற்கும் உத்தரவுகளை செயல்படுத்தும் வகையில் அல்லது வழிகாட்டுதல் அல்லது கொள்கை முடிவுகளை கொடுப்பதில் தகராறு ஏற்பட்டால், பாதிக்கப்பட்டவர் அதாவது ஆணையம் அல்லது வாரியம் பிரிவு 50ன் கீழ், படிவம் V ஐ பயன்படுத்தி மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை செயலருக்கு மேல் முறையீடு செய்யலாம்.

2. மாநில பல்லுயிர்பெருக்க வாரியத்திற்கும் மற்ற மாநில பல்லுயிர் பெருக்க வாரியத்திற்கு / வாரியங்களுக்கும் இடையே பிரச்சனைகள் எழும் பட்சத்தில், பாதிக்கப்பட்ட வாரியம் அல்லது வாரியங்கள், பிரச்சினையிலுள்ள முக்கிய அம்சம் அல்லது அம்சங்களை குறிப்பிட்டு மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். இதனை, மத்திய அரசு தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்திற்கு பரிந்துரைக்க வேண்டும்.

3. மேல்முறையீட்டு கோரிக்கை மனுவில் வழக்கின் கருத்துகளை குறிப்பிடவேண்டும். வழக்குதாரரின் மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களின்பேரில் தீர்வுகான முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

4. நம்பத்தகுந்த உத்தரவினுடைய நகல், வழிகாட்டுதலின் நகல் அல்லது செயற்திட்ட கொள்கைகதீர்மானத்தின் நகலை பாதிக்கப்பட்டவர், மேலும், பாதிக்கப்பட்டவர் அல்லது பாதிக்கப்பட்டவரால் நியமிக்கப்பட்டவரின் கையொப்ப;த்துடன் கூடிய மேல்முறையீட்டு கோரிக்கை மனுவுடன் இணைக்க வேண்டும்.

5. மேல்முறையீட்டு கோரிக்கை மனுவின் நான்கு நகல்களை நேரடியாகவோ அல்லது ஒப்புகை ரசீதுடன் விரைவு அஞ்சல் மூலமாகவோ, உத்தரவு பிறப்பித்த அல்லது உத்தரவிட்ட அல்லது செயற்திட்ட கொள்கை தீர்மான தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அனுப்ப வேண்டும். இருப்பினும், மேல்முறையீட்டு கோரிக்கை மனுவை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டால், எழுத்துபூர்வமாக அளி,த்த தாமதத்தின் காரணம் சரியென கருதும்பட்சத்தில் மேற்கண்ட தேதியிலிருந்து மேலும் 15 நாட்களுக்குள் அதாவது மேலும் 45 நாட்களுக்கு மிகாமல் மேல்முறையீட்டு கோரிக்கை மனுவை சமர்பிக்க அனுமதிக்கலாம்.

6. அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவம் 6ஐ பயன்படுத்தி மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை பற்றிய அறிவிப்பை ஒப்புதல் ரசீதுடன் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

7. மத்திய அரசு, பாதிக்கப்பட்டவர் மற்றும் இதர நபர்களில் கருத்துக்களை கேட்ட பிறகு மேல்முறையீட்டு மனுமீதான தீர்ப்பை அளிக்கும்.

8. மேல்முறையீட்டு மனுமீதான தீர்ப்பின் உத்தரவை, வழிகாட்டியை அல்லது செயற்திட்ட கொள்கை தீர்மானம் ஆகியவை திருத்தபடலாம் அல்லது மாற்றி அமைக்கப்படலாம் அல்லது தள்ளுபடி செய்யபடலாம்.

பிரச்சனையை தீர்மானிக்கையில் தேசிய பல்லுயிர்பெருக்க ஆணையம் இயற்கை நீதித் தத்துவங்களினால் வழிநடத்தப்படுவதுடன் மத்திய அரசால் பரிந்துரைக்கப்படும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

24. பிரிவு 61ன் கீழ் அறிக்கை கொடுக்கும் முறை

1. பின்வருவன பிரிவு 61 உட்பிரிவு (6)ன் கீழ் அறிக்கை கொடுக்கும் முறை, அதாவது :

   (i) படிவம் ஏழில் எழுத்து வடிவத்திலும்

   (ii) அறிக்கை கொடுக்கும் நபர், இவ்வறிக்கையை கீழ்கண்ட நபருக்கு அனுப்புதல்.

   (a) யூனியன் பிரதேசத்தில் (Union territory) குற்றம் சொல்லப்படுகிறபடி நடந்தால், தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய தலைவருக்கு, மற்றும்

   (b) மாநிலத்தில் குற்றம் சொல்லப்படுகிறபடி நடந்தால், மாநில பல்லுயிர் பெருக்க வாடிலயத் தலைவருக்கும்

2. உப-விதி (1)ல் சொல்லப்பட்ட அறிக்கை ஒப்புகை ரசீதுடன் (acknowledgement due) பதிவு அஞ்சல் மூலம் அனுப்பபப்படும்.

3. பிரிவு 61ன் உட்பிரிவு (b)ல் கூறப்பட்டபடி முப்பது நாட்கள் கணக்கின்படி உப-விதி (1)ல் கூறப்பட்டபடி ஆணையத்தால் அறிக்கையை பெறபட்டிருக்க வேண்டும்.

படிவம் I

(விதி எண் 14 பார்க்க)

உயிரியியல் வளங்களையும் அதுசார்ந்த பாரம்பரிய அறிவாண்மையும் பெறுவதற்கான விண்ணப்ப படிவம்

பாகம் அ

(i) விண்ணப்பதாரரின் முழு விபரம்

(ii) பெயர்

(iii) நிரந்தர குடியிருப்பு விலாசம்

(iv) இந்தியாவில் தொடர்புகொள்ள வேண்டியவர் / முகவர் விலாசம்

(v) கழகத்தின் முகக் குறிப்பு (விண்ணப்பதாரர் தனிநபராயின் அவருடைய முகக்குறிப்பு) தயவு செய்து ஊர்சிதம் செய்யக்கூடிய ஆவணங்களை இதனுடன் இணைக்கவும்.

(vi) இயல்பான தொழில் விபரம்

(vii) வியாபாரத்தில் மொத்தமாக ஈடுபடுத்தப்பட்ட தொகை அமெரிக்க தொகையில்

உயிரியியல் வளம் மற்றும் அதுசார்ந்த பாரம்பரிய அறிவு ஆகியவற்றை பெற அணுகும் முறை இயல்பு பற்றிய சிறப்பு தகவல் மற்றும் விவரம்

(எ) உயிரியியல் ஆதாரங்கள் மற்றும் அதனுடைய பாரம்பரிய பயன்களை கண்டறிதல் (அறிவிய;ல் பெயர்)

(பி) சேகரிப்புத் திட்டத்திற்கான புவியியல்ப் பகுதி

(சி) விளக்கம் / பாரம்பரிய அறிவாண்மையின் இயல்பு (வாய்வழி செய்தி / ஆவணம்)

(டி) பாரம்பரிய அறிவுள்ள தனிநபர் / பொதுமக்கள்

(இ) உயிரியியல் ஆதாரங்களை சேகரிக்கும் அளவு (அட்டவணை கொடு)

(எஃப்) உயிரியியல் ஆதாரங்களின் சேகாரத்திட்டத்தின் கால அளவு

(ஜி) நிறுவனத்தால் தேர்வு செய்யப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்ட நபரின் பெயர் மற்றும் எண்ணிக்கை

(ஹெச்) ஆராய்ச்சியின் காலத்தை நீடித்தல், வணிக பயன்பெறுதல் மற்றும் பெற எதிர்பார்த்தல் ஆகியவைகளை உள்ளடீக்கி கோருதலின் நோக்கம்.

(ஐ) திட்டத்திற்காக சேகரிக்கப்படும் ஆதாரங்களால் பல்லுயிர்பெருக்க பகுதிக்கு அழிவு மற்றும் அபாயம் ஏற்படுமா

3. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள யாதொரு இந்திய நிறுவனத்தின் விபரம்.

4. ஆதாரத்தை சேகரிக்க வேண்டிய முதல் இடம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடைபெறும் இடத்தை கண்டறிதல்

5. விண்ணப்பத்தாரருக்கு கிடைக்க கூடிய அல்லது அவர் / அவள் சார்ந்த நாட்டுக்கு உயிரியிய;ல் ஆதாரங்கள் மற்றும் அறிவை அடையும் வழியினால் பெறப்பட்ட தன்னாட்சியுரிமை (Patent) மற்றும் அறிவுணர் உரிமை (IPR) ஆகியவைகளை உள்ளடக்கிய பொருளாதார மற்றம் இதர பயன்கள்.

6. உயிரியியல் ஆதாரம் மற்றும் அது சார்ந்த பாரம்பரிய அறிவாண்மையிலிருந்து பெறப்படும் உயிர் தொழிற்நுட்பம், அறிவிய;ல், சமுதாய அல்லது இதர பயன்கள் அல்லது விண்ணப்பத்தாரருக்கு கிடைக்ககூடிய அல்லது அவர் / அவள் சார்ந்த நாட்டுக்கு

7. உயிரியியல் ஆதாரங்கள் மற்றும் பாரம்பரிய அறிவாற்றல் மூலம் மக்களக்கு கிடைக்கும் பயன்.

8. செயலமைவுத் திட்டத்திற்கான இயக்க ஏற்பாடு மற்றும் பயன் பகிர்வு.

9. இது சம்பந்தப்பட்ட இதர தகவல்கள்

## பகுதி - ஆ
## உறுதி மொழி

நான் / நாங்கள் உறுதியளிப்பதாவது :

- நிலையான உயிரியல் வளத்திற்கு யாதொரு குந்தகம் விளைவிக்காமல் திட்டமிடப்பட்ட உயிரியியல் வளத்தை சேகரித்தல்.
- சுற்றுச்சூழலுக்கு யாதொரு விளைவும் ஏற்படாமல் திட்டமிடப்பட்ட உயிரியியல் ஆதாரத்தை சேகரித்தல்.
- சூழலுக்கு எந்த ஒரு அபாயமும் ஏற்படாமல் திட்டமிடப்பட்ட உயிரியியல் ஆதாரத்தை சேகரித்தல்.
- உள்ளூர் மக்களுக்கு யாதொரு குந்தகம் விளைவிக்காமல் திட்டமிடப்பட்ட உயிரியியல் ஆதாரத்தை சேகரித்தல்.

நான் / நாங்கள் தரும் தகவல் அனைத்தும் உண்மையே நாங்கள் தரும் குறிப்புகளில் தவறுகளோ / பிழைகளோ இருப்பின் நாங்களே பொறுப்பு.

கையொப்பம்

இடம் | பெயர்

தேதி | பணியிடப் பெயர்

## படிவம் II

(விதி எண் 17ஐ பார்க்க)

ஆராய்ச்சி முடிவுகளை வணிக பயனுக்காக வெளிநாடுகள், நிறுவனங்கள், தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மாற்றம் செய்ய பல்லுயிர் பெருக்க ஆணையத்திடம் முன் அனுமதி பெறும் விண்ணப்பம்.

1. விண்ணப்பதாரரின் முழு விவரம்
   - (i) பெயர்
   - (ii) விலாசம்
   - (iii) உத்தியோக சம்பந்தமான குறிப்பு
   - (iv) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (ஊர்ஜிதம் செய்யப்பட்ட முறையான பத்திரத்தை இணைக்கவும்)
2. நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின் வீவரம்
3. உயிரியியல் ஆதாரத்தின் விவரம் மற்றும் / அல்லது ஆராய்ச்சியின் சம்பந்தப்பட்ட அறிவு.
4. உயிரியியல் ஆதார ஆராய்ச்சி சேகாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட புவியியல் பகுதி.
5. ஆராய்ச்சிக்கு பயன்படுத்திய யாதொரு பாரம்பரிய அறிவின் விவரம் மற்றும் யாதொரு கண்டறியப்பட்ட தனிநபர் / பொது ஜனங்களின் பாரம்பரிய அறிவு.
6. ஆராய்ச்சி மற்றம் வளர்ச்சி பணிகள் நிறுவனத்தால் நடத்தப்பட்ட விவரம்.
7. தனிநபர் / நிறுவனம் ஆராய்ச்சி முடீவுகளை மாற்றம் செய்வதற்கான விவரம்.
8. பொருளாதார, உயிர்தொழிற்நுட்ப, அறிவியல் அல்லது இதர மற்ற பயன்கள் அல்லது தனிநபருக்கு / நிறுவனத்திற்கு கிடைக்க கூடிய வாணிபத்திற்காக மாற்றப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின் விவரம்.
9. பொருளாதார, உயிர்தொழிற்நுட்ப, அறிவியல் அல்லது இதர மற்ற பயன்கள் அல்லது விண்ணபத்தாரர் ஆராய்ச்சி முடிவுகளை மாற்றம் செய்வதற்கான விவரம்.
10. ஆராய்ச்சி முடிவுகளை மாற்றுவதற்கான அனுமதி கேட்கும் விண்ணப்பதாரர் மற்றும் பெறவடியவர்களுக்கு இடையேயான மத்திய அரசின் ஒப்புதல் / யாதொரு ஒப்பந்தம்பற்றிய விவரம்.

## உறுதிமொழி

நான் / நாங்கள் தரும் தகவல் அனைத்தும் உண்மையே, நாங்கள் தரும் குறிப்புகளின் தவறுகளோ / பிழைகளோ இருப்பின் நாங்களே பொறுப்பு.

கையொப்பம்

இடம் பெயர்

தேதி பணியிடப் பெயர்

படிவம் III

(விதி எண் 18ஐ பார்க்க)

அறிவுணர் உரிமைக்கு (Intellectual Property Rights) தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்திடம் முன் அனுமதி பெறும் விண்ணப்பம்.

1. விண்ணப்பதாரரின் முழு விவரம்

   (i) பெயர்

   (ii) விலாசம்

   (iii) உத்தியோக சம்பந்தமான குறிப்பு

   (iv) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைக்கவும்)

2. அறிவுசார் உரிமைக்கான புதிய கண்டுபிடிப்பின் விவரம்

3. உயிரியல் ஆதாரத்தினுடைய மற்றும் / அல்லது புதிய கண்டுபிடிப்புக்கு பயன்பட்ட அறி ஆகியவைகளின் விவரம்.

4. புதிய கண்டுபிடிப்புக்கு பயனான உயிரியல் ஆதாரம் உள்ள நிலஇயல் பகுதி.

5. புதிய கண்டுபிடிப்புக்கு பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய அறிவாண்மையின் விவரம் மற்றும் கண்டறியப்பட்ட தனிநபர் / பாரம்பரிய அறிவாண்மை கொண்ட பொதுமக்கள்.

6. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை மேற்கொண்ட நிறுவனத்தின் விவரம்.

7. பொருளாதார, தொழிற்நுட்ப, அறிவியல் பயன் அல்லது உள்நோக்கமுள்ள இதர பயன்களின் அல்லது விண்ணப்பத்ததாரரின் ஒழுங்குமுறை வாணிபத்திற்கான புதிய கண்டுபிடிப்பின் விவரம்.

## உறுதிமொழி

நான் / நாங்கள் தரும் தகவல் அனைத்தும் உண்மையே, நாங்கள் தரும் குறிப்புகளின் தவறுகளோ / பிழைகளோ இருப்பின் நாங்களே பொறுப்பு.

கையொப்பம்

இடம் பெயர்

தேதி பணியிடப் பெயர்

## படிவம் IV

(விதி எண் 19ஐ பார்க்க)

உயிரியியல் ஆதாரம் மற்றும் அதுசார்ந்த பாரம்பரிய அறிவு உடமைகளை மூன்றாவது நபருக்கு மாற்றம் செய்வதற்காக தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்திடம் அனுமதி பெறும் விண்ணப்ப படிவம்.

1. விண்ணப்பதாரரின் முழு விவரம்
   - (i) பெயர்
   - (ii) விலாசம்
   - (iii) உத்தியோக சம்பந்தமான குறிப்பு
   - (iv) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (ஊர்ஜிதம் செய்யப்பட்ட முறையான பத்திரத்தை இணைக்கவும்)
2. நுழையுரிமை பெற்ற உயிரியியல் பொருள்கள் மற்றும் பாரம்பரிய அறிவாண்மை பற்றிய விவரம்.
3. நுழையுரிமை பெற்றதற்கான விவரம் (நகல் இணைக்கவும்)
4. பயன்கள் மற்றும் செயலமைப்பு திட்டம் / ஏற்கனவே நிர்மானிக்கப்பட்ட பங்கீட்டை ஒழுங்கு செய்வதற்காக
5. பொருள்களின் மீது நழையுரிமை பெறபோகும் மூன்றாவது நபருடைய முழு விவரம் / மாற்றம் செய்யப்பட இருக்கு அறிவாண்மை
6. மூன்றாவது நபருக்கு மாற்றம் செய்வதின் நோக்கம்.
7. சமூக பொருளாதார, தொழிற்நுட்ப, அறிவியல் அல்லது இதர பயன்களை பெறுவதின் உள்நோக்கம், அல்லது மூன்றாவது நபருக்கு நுழையுரிமை பெற்ற உயிரியியல் பொருள்கள் மற்றும் அறிவாண்மை மாற்றி உரிமையாக்கலாம்.
8. விண்ணப்பத்தாரருக்கும் மூன்றாவது நபருக்கு இடையேயான ஒப்பந்தத்தின் விவரம்.
9. இந்தியாவுக்கு கிடைக்கும் பயனின் மதிப்பீடு / நழையுரிமை பெற்ற மக்களிடமிருந்து பெறப்பட்ட உயிரியியல் பொருள் மற்றும் பாரம்பரிய அறிவாண்மை மூன்றாவது நபருக்கு மாற்றம் செய்வதற்கான மதிப்பீடு.
10. மூன்றாவது நபருக்கு மாற்றப்பட உள்ள பங்கீட்டிற்கான செயல்முறை திட்டத்தை ஒழுங்கு செய்வது
11. இதர சம்பந்தப்பட்ட விவரம்

### உறுதிமொழி

நான் / நாங்கள் தரும் தகவல் அனைத்தும் உண்மையே, நாங்கள் தரும் குறிப்புகளின் தவறுகளோ / பிழைகளோ இருப்பின் நாங்களே பொறுப்பு.

கையொப்பம்

இடம் — பெயர்

தேதி — பணியிடப் பெயர்

படிவம் V

(விதி 23(1)ஐ பார்க்க)

மேல் முறையீட்டிற்கான கோரிக்கை மனுக்கான படிவம்

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வளத்துறை அமைச்சகம், புது டெல்லி, பார்வைக்கு

அல்லது

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம்

(நிலவரத்திற்கேற்ப (as the case may be) )

(பல்லுயிர் பெருக்கச் சட்டம், 2002ன் பிரிவு 50ன் கீழ் மேல்முறையீட்டிற்கான கோரிக்கை மனு)

முறையீட்டு எண். ................ 200

……………………………

…………………………………

.......................... மேல் முறையீட்டாளர்(கள்)

Vs.

……………………………….

……………………………….

(ஆணைய / வாரிய அதிகாரியின் பதவியை குறிப்பிடவும்)

............................ எதிர்வாதி(கள்)

கீழ்கண்ட நிகழ்ச்சி மற்றும் காரணங்களுக்காக எதிர்வாதியால் ....................... தேதியில் அனுமதியளிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மேல்முறையீட்டாளர் தொடுக்கும் கோரிக்கை மனு.

1. சாராம்சம் (Facts)

(வழக்கின் நிகழ்ச்சியை விவரத்தளி)

2. பின்னணி

(மேல்முறையீட்டிற்கான காரணங்களை குறிப்பிடவும்)

(i)

(ii)

(iii)

3. நிவாரணம் கோருதல் (Relief Sought)

(i)

(ii)

(iii)

4. தள்ளுபடியாக வேண்டல்

(a) மேல் கூறப்பட்டுள்ளவைகளை விளக்கும் நோக்கில், மேல்முறையீட்டாளர் எதிர்வாதியினுடைய உத்தரவை / முடிவை தள்ளுபடி செய்ய வேண்டுதல்.

(b) எதிர்வாதியால் உருவாக்கப்பட்ட கோட்பாடு / விதிமுறைகள் / ஒழுங்குமுறை விதிகளை தள்ளுபடி செய்தல் / மாற்றியமைத்தல் / நடைமுறையிலிருந்து நீக்குதலுக்கு ...................... ........................................................................................

(c) ........................................................................................

இடம் :

தேதி : மேல் முத்திரையுடன் முறையீட்டாளரின் கையொப்பம்

முகவரி

## ஒப்பாய்வு(Verification)

மேல்முறையீட்டாளரான நான், மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தும் உண்மை என ஒப்புக்கொள்கிறேன்.

ஒப்பாய்வான தேதி ....................... நாள் .............................

மேல் முத்திரையுடன் முறையீட்டாளரின் கையொப்பம்
முகவரி

மேல்முறையீட்டாளரின் உரிமைபெற்ற நபரின் கையொப்பம்

இணைப்பு 1: மேல்முறையீடு செய்யப்பட்ட உத்தரவு / விதிமுறை / ஒழுங்குமுறை விதியின் நகல்

## படிவம் VI

(விதி 28ஐ பார்க்க)

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், புது டெல்லியின் பார்வைக்கு.........................

அல்லது

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம்

(நிலவரத்திற்கேற்ப (as the case may be) )

(பல்லுயிர் பெருக்கச் சட்டம், 2002ன் பிரிவு 50ன் கீழ் மேல்முறையீட்டிற்கான கோரிக்கை மனு)

முறையீட்டு எண். ................ 200

……………………………

...................................... ...மேல் முறையீட்டாளர்(கள்)

Vs.

………………………………

.................................... ...எதிர்வாதி(கள்)

## அறிவிப்பு

உத்தரவு / வழிமுறை / ஒழுங்குமுறை விதி (விவரம் தரவும்) ஆகியவைகளின் பேரில் மேல்முறையீட்டாளரால் தொடுக்கப்பட்ட வழக்கின் விசாரணை ......................... தேதியில் ......................... இடத்தில் விசாரிக்கப்படும் என்பதை அறிவிக்கின்றோம்.

மேல் முறையீட்டு கோரிக்கை மனுவின் நகல் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்புகளின் நகல்களை பார்வைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

மேல்முறையீட்டு விசாரணைக்கு மேற்குறிப்பிட்ட தேதி அல்லது அதையொட்டி கொடுக்கப்பட்ட தேதியில் ஆஜராகவில்லையென்றால் வழக்கின் போக்கிற்கே தீர்ப்பு வழங்கப்படும்.

மேல்முறையீடுகளை ஏற்று ஆராய்கிற அதிகாரியின் கையொப்பம்
(முத்திரையுடன்)

தேதி :

இடம் :

படிவம் VII

அறிவிப்பு படிவம்

(விதி 24 (1)ஐ பார்க்க)

பதிவு அஞ்சல் மூலம் / ஒப்புமை ரசீதுடன்

அனுப்புநர்

திரு...........................................

..................................................

..................................................

பெறுநார்,

...................................................

...................................................

...................................................

பொருள் : பல்லுயிர் பெருக்கச் சட்டம், 2002, பிரிவு 61 (b) ன் கீழான அறிக்கைக்கான அறிவிப்பு

பல்லுயிர் பெருக்கச் சட்டம், 2002ன் கீழ் குற்றம் செய்திருந்தால் / செய்யப்பட்டிருந்தால் ......................

2. நான் / நாங்கள் பல்லுயிர் பெருக்கச் சட்டம் 2002 பிரிவு 61 (b) ன் யாதொரு வழிவகையின்படி விதிமுறைகளை மீறுபவருக்கு எதிராக, முப்பது நாள்கள் கால அவகாசம் கொடுத்து நான் / நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க இருக்கிறோம்.

3. நான் / நாங்கள் அறிவிப்பு அறிக்கையை வலுப்படுததும் வகையில் நான் / நாங்கள் நிறுவனத்திற்கான சான்றுகளை இத்துடன் இணைக்கின்றோம்.

தேதி :

இடம் :

கையொப்பம்

விளக்கம் :

1. நிறுவனத்தின் பெயரின் அறிவிப்பு அறிக்கை அனுப்பும்போது, அறிவிப்பை பெறுபவர், தனக்கு நிறுவனம் அளித்த அதிகார சான்றின் நகலை அறிவிப்பு அறிக்கையுடன் இணைக்க வேண்டும்.

2. ஆணையத்தின் ஒப்புதல் பெறாமல், உயிரியியல் ஆதாரம் / அறிவிப்பை / ஆராய்ச்சி / உயிரியியல் அளவை மற்றும் உயிரியல் பயன்கள் / அறிவுகள் உரிமை / தன்னாட்சியுரிமை, ஆகியவற்றின் பேரில் வாணிகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தால் அவற்றைப் பற்றிய விவரத்தை இணைத்து சொல்லப்படுகின்ற குற்றம்புரிந்தவரின் பெயர் மற்றும் முகவரியை கொடுக்க வேண்டும்.

3. குற்றம் புரிந்தவரை விசாரணை செய்யும் அதிகாரத்திற்கான உண்மை நிகழ்ச்சியை காட்டும் சான்ற, நிழற்படம், தொழிற்நுட்ப ஆய்வு முடிவுகள் போன்றவைகளை கொடுக்க வேண்டும்.

(என். J-22018/57/2002-CSC (BC)

தேஷ் தீபக் வர்மா

இணைச் செயலாளர்

## புது தில்லி, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிவிக்கை

எஸ். ஒ. 1146 (ஆ) – இந்திய பல்லுயிர் பெருக்கச் சட்டம் 2002 (18/2003), பிரிவு 1ன் உப-பிரிவு (3)ன்படி, மத்திய அரசு 2003, அக்டோபர் முதல் தேதியிலிருந்து கீ;ழ்கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகளை நியமிக்கும். அதாவது பல்லுயிர் பெருக்கச் சட்டத்தினுடைய பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 7 மற்றும் 17 (இரண்டும் உட்பட); பிரிவு 48, 54, 59, 62, 63, 64 மற்றும் 65 பிரிவுகள், 2003 அக்டோபர் 1 முதல் செயல்படுத்தபடும்.

**(F.No. J-22018/46/2003-CSC (BC)**
**தேஷ் தீபக் வர்மா**
**இணைச் செயலாளர்**

ஜி.எஸ்.ஆர். 779 (இ) – பல்லுயிர்பெருக்கச் சட்டம், 2002 (18/2003), பிரிவு 62ன் உப-பிரிவு (2) உட்பிரிவு (இ) உடன் உப-பிரிவு (1)ன் படி மத்திய அரசு கீழ்கண்ட விதிகளை நியமிக்கும். அதாவது ஊதியம், படி, தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிமித்தமான நிபந்தனைகள் விதி 2003, அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்து செய;ல்படுத்தப்படும்.

**(F.No. J-22018/46/2003-CSC (BC)**
**தேஷ் தீபக் வர்மா**
**இணைச் செயலாளர்**

எஸ்.ஒ. 1147(இ) – பல்லுயிர்பெருக்கச் சட்டம், 2002 (18/2003) பிரிவு 8ன் உப-பிரிவுகள் (1) மற்றும் (4)ன்படி மத்திய அரசு ஒரு குழுவை ஏற்படுத்தும். இக்குழுக்கு தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் என்று 2003 அக்டோபர் 1ஆம் தேதியிலிருந்து மேற்கூறப்பட்ட சட்டத்தின் கீழ் கீழ்கண்ட நபர்களை கொண்டிருக்கும். பிரிவு (8)ன் உப-பிரிவு (4) கூறு (a) ன் கீழ் ஆணைய தலைவரை நியமிக்கும். அது 2003 அக்டோபர் 1ஆம் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

**(F.No. J-22018/46/2003-CSC (BC)**
**தேஷ் தீபக் வர்மா**
**இணைச் செயலாளர்**

எஸ்.ஒ. 497 (இ) – பல்லுயிர் பெருக்கச் சட்டம் 2002 (18/2003), பிரிவு 8, உப-பிரிவுகள் (1) மற்றும் (4)ன்படி, தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையத்தினுடைய விதி (5) உப-விதி (1)ன்படி (ஊதியம், படி, மற்றும் ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிநிமித்தமான நிபந்தனைகள்) விதி 2003, மத்திய அரசு கீழ்காணும் அலுவல் முறைசாரா உறுப்பினர்களை நியமித்தலுக்கான அறிவிக்கை எண் எஸ்.ஒ. 1147 (இ), 2003 அக்டோபர் 1ஆம் தேதியிலிருந்து அரசிதழில் வெளியிடப்பட்டு 2004 ஏப்ரல் 15ம் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

**(F.No. J-22018/46/2003-CSC (BC)**
**தேஷ் தீபக் வர்மா**
**இணைச் செயலாளர்**

ஜி.எஸ்.ஆர். 261 (ஆ) - பல்லுயிர் பெருக்கச் சட்டம் 2002, தேசிய பல்லுயிர் பெருக்க ஆணைய பதிலீட்டகற்றீடு (ஊழியம்), படி, மற்றும் ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிநிமித்தமான நிபந்தனைகள்) விதி, 2003, இதற்கு முறபட்ட பதிலீட்டகற்றீடை தவிர்த்து, மத்திய அரசு கீழ்கண்ட விதியை 2004, ஏப்ரல் 15ஆம் தேதியிலிருந்து செயல்படுத்தும்.

**(F.No. J-22018/57/2003-CSC (BC)**

**தேஷ் தீபக் வர்மா**

**இணைச் செயலாளர்**

எஸ்.ஓ. 753 (E) - பல்லுயிர் பெருக்கச் சட்டம், 2002 (18/2003), பிரிவு 1, உப-பிரிவு (3)ன்படி மத்திய அரசு 2004, ஜூலை 1ஆம் தேதியிலிருந்து மேற்கூறப்பட்ட சட்டத்தின் கீழ், கீழ்கண்ட பிரிவுகள்; அதாவது பிரிவு 3-7 (இரண்டும உட்பட) ; பிரிவு 18-47 (ஆண்டு உட்பட); மற்றும் பிரிவுகள் 60 மற்றும் 61 ஆகிய பிரிவுகள் செயல்படுத்தப்படும்.

**(F.No. J-22018/57/2003-CSC (BC)**

**தேஷ் தீபக் வர்மா**

**இணைச் செயலாளர்**